





# ஞானச்சுடர்

## மலர்

ஐப்பசி 1999




வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## குறள் வழி

" கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே
பெருஞ் செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. "

பொருள்:-

பெரிய செல்வமானது கூத்தாட்டம் முடிந் ததும் கூட்டம் கலைவதைப் போல் செல் வமும் போய்விடும்.

ஸ்ரீ

### அருணாசல அக்ஷர மணமாலை

நூல்

*அருணாசலசிவ அருணாசலசிவ*
*அருணாசலசிவ அருணாசலசிவ!*

96 ) *விட்டிடிற் கட்டமாம் விட்டிடா துனையுயிர்*
*விட்டிட வருள்புரி யருணாசலா* (அ)

97 ) *வீடுவிட் டீர்த்துன் வீடுபுக்குப் பையவுன்*
*வீடுகாட் டினையரு ளருணாசலா* (அ)

98 ) *வெளிவிட்டே னுன்செயல் வெறித்திடா துன்னருள்*
*வெளிவிட் டெனைக்கா வருணாசலா* (அ)

99 ) *வேதாந் தத்தே வேறற விளங்கும்*
*வேதப் பொருளரு ளருணாசலா* (அ)

100 ) *வைதலை வாழ்த்தா வைத்தருட் குடியா*
*வைத்தெனை விடாதரு ளருணாசலா* (அ)

[தொடரும்... — —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 22

1999 ஐப்பசி

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 1 - 6 |
| 2) | சிந்தனைத் துளிர்கள் | 7 - 10 |
| 3) | ஆத்மீகத்திற்கு ஆலயவணக்கம் தேவைதானா | 11 - 13 |
| 4) | தொடர்ந்து நின்ற தாய் | 14 - 16 |
| 5) | செயற்கரும் செய்கை செய்தநிரன் | 17 - 18 |
| 6) | கடவுள் ஒன்றே | 19 - 21 |
| 7) | நிர்மாலிய மகிமை | 22 - 25 |
| 8) | தீபாவளி பற்றி ரமணமகரிஷி | 26 - 27 |
| 9) | முருகன் பெயருக்கு விளக்கங்கள் | 28 - 33 |
| 10) | சந்நிதியான் | 34 - 37 |
| 11) | பாராட்டு விழா | 38 - 40 |
| | மாணவர் பக்கம் | |
| 12) | குருவழிபாடு | 41 - 43 |
| 13) | Easy Way to Learn English (Part-21) | - 44 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் செழுமயம்

# சந்நிதி வேலவா!

சந்நிதி வேலவா, உம்மை நாடிவரும்
அடியார்களைக் காத்திடும் ஐயா
உம்மை நாடிவரும் அடியவர்களுக்கு
வரம் கொடுக்கும் செல்வச்சந்நிதி அருள்
மிகுஸ்ரீ வேலவனே, அருள் புரிவாய்
நாடு நலம்பெற, மக்கள் மனநிம்மதியுடன்
வாழ, அமைதி நிலைபெற்றுச் சமாதானம்
பெற உமது ஆசிஅருளும் ஐயா!
உம்மை நாடிவரும் அடியவர்கள் துயர்
மனவேதனையைத் தீர்ப்பாய் ஐயா!
அப்புவியின் அடியவர்கள் பம்பரமாய்ச் சுழன்றுழல் வதைத்
துயரமாய்க் கடைவிழியால் நோக்கியருள்வாய் ஐயா!
சாம்பலாய்ப் போகும் ஜீவிதத்தை இத்
தாரணியில் தந்ததுமேன் ஐயா?
தேம்பியழும் உம் அடியார்களுக்குத்
திருவாய் மலர்ந்து அருள்வாய் ஐயா!
வள்ளி - தெய்வானையோடு இணைந்து
வாழும் சந்நிதிவேலவா - வெற்றி வேலாயுதா
எம்பெருமானே சரணம் ஐயா!
இம்மையிலும் மறுமையிலும் நின் பொற்கரங்களால்
அணைத்தே எனைக் காத்திடும் ஐயா!
தொண்டைமானாறு சந்நிதி வேலவனே
உம்மை நாடிவரும் அடியவர்களைக் காத்திடும் ஐயா!

'சமூகமணி' சி. சி. வரதராசா J. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்"

## புரட்டாதி மாத வெளியீடு

வெளியீட்டுரை:-

புரட்டாதி மாத மலருக்கான வெளியீட்டுரையை ஓய்வுபெற்ற அதிபரும் சமாதான நீதிபதியாகிய திரு. கணேசதாசன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் சமய உணர்ச்சியும் சிந்தனையும் இருக்கத்தான் செய்கின்றது. ஆனாலும் எது நல்லது, எதைச் செய்யலாம் என்று தீர்மானம் மேற்கொண்டு நல்ல பாதையில் செல்லுதற்கு ஒரு தூண்டி தேவைப்படுகின்றது. அதுமட்டுமன்றி நல்லவற்றை தெளிவுபடுத்தவேண்டிய அவசியமும் இன்று ஏற்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் ஞானச்சுடர் மக்கள் மத்தியில் தனது சுடரொளியை ஒளிரச்செய்கின்றது என தனது வெளியீட்டுரையில் குறிப்பிட்டார்.

மதிப்புரை -

இந்த மலருக்கான மதிப்புரையை வலயம் ஒன்றின் கல்வித்திணைக்களத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றும் திரு. எம். எஸ். தயாளன் அவர்கள் மேற்கொண்டார்கள். இவர் ஆரம்பத்தில் ஆச்சிரமத்தினுடைய அன்னதானப்பணியின் சிறப்பை பலகோணங்களிலிருந்து தெளிவுபடுத்தினார்கள். அந்த அன்னதானத்துடன் சேர்த்து வித்தியாதானத்தையும் மேற்கொண்டுவருவது இதனுடைய தனித்துவமாக உள்ளதென்பதையும் எடுத்துக்கூறினார்கள்.

சைவம் என்பதனை முதற் சொல்லாகக்கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்தப்பேரவை சைவசமயத்தவர்கள் பயனடையக்கூடிய தரமான பல கட்டுரைகளை வெளியிட்டுவருவதையும் சுட்டிக்காட்டினார்கள்.

ஒவ்வொரு கட்டுரையையும் விமர்சனரீதியாய் மதிப்பிட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் மலர் தொடர்பான ' தனது ஆலோசனைகள் பலவற்றையும் எடுத்துக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. சி. மகாலிங்கம்
( உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க இயக்குனர் )

திரு. இ. சிவசுப்பிரமணியம்
( மதுபரிபாலனப் பகுதி, அல்வாய் )

உரிமையாளர்
( கிருஷ்ணா ஸ்ரோர், சங்கானை )

திரு. ந. யோகரத்தினம்
( இலங்கை வங்கி, நெல்லியடி )

திரு. கோ. லோகநேசன்
( ஆசிரியர், அல்வாய் )

திரு. அ. கணபதிப்பிள்ளை
( கிளைமுகாமையாளர், அச்சுவேலி )

திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை
( மாவடிவளவு, பத்தமேனி )

திரு. S. கனகசுந்தரம்
( சிறுப்பிட்டி தெற்கு, சிறுப்பிட்டி )

திரு. பூ. நித்தியானந்தம்
(சிறுப்பிட்டி தெற்கு, சிறுப்பிட்டி)

திரு. கந்தையா கணேஸ்
(சிறுப்பிட்டி தெற்கு, சிறுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப்படுத்தும்

## மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# மதிவென்றது

(தொடர்ச்சி

விதுரர் நம்பிக்கை மிக்க உதவியாளன் ஒருவனைப் பாண்டவர்களிடம் அனுப்பி வைத்தார். அவன் சுரங்கம் முதலியன அமைப்பதில் மிகவும் கைதேர்ந்தவன். அவன் சில நாட்களின் பின் பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தான். விதுரர் அனுப்பியதை உறுதிசெய்யும் வண்ணம் விதுரர் கூறிய சங்கேத மொழியினைப் பாண்டவர்களுக்கு உரைத்துநின்றான். பாண்டவர்களும் வந்த மனிதன் விதுரர் அனுப்பியவனே என்று முடிவு செய்து தக்க சமயத்தில் விதுரர் அம்மனிதனை அனுப்பியமைக்கு மிகவும் மகிழ்ந்து அம்மனிதனைக் கொண்டு மிகவும் இரகசியமான முறையில் சுரங்கப் பாதை ஒன்றை அமைக்க முற்பட்டனர். நாட்கள் சென்றன. சுரங்கம் மாளிகையினின்றும் பாண்டவர் வெளியேறி, நடுவனத்தை அடையும் வண்ணம் அமைந்து முடிக்கப் பெற்றது. பாண்டவர்கள் வெகு விரைவில் அரக்கு மாளிகையினின்றும் தப்பிச் செல்லச் சந்தர்ப்பம் நோக்கிக் காத்திருந்தனர்.

குந்திதேவி வழமைபோல் ஏழை எளியவர்கட்கும் பிராமணோத்தமர்கட்கும் அன்னமிட்டுத் தன் கடமைகளைச் செய்த வண்ணம் இருந்தான். இவ்வாறு ஓராண்டுகாலம் ஓடிச்சென்றது. புரோசனன் மிகவும் மனக்களிப்புடன் இருந்தான். பாண்டவர்கள் தன்னை நம்பித் தன்னுடன் வாழ்வது அவனுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ஒரு நாள் குந்திதேவியிடம் அன்னம் பெற்றுப் பசிபோக்க வந்த வேடர் குடும்பம் ஒன்று இரவு நேரமானதனால் அன்று அம்மாளிகையிலேயே தங்கியிருந்தது. விருந்துண்டகளைப்பால் தாயும் ஐந்து புதல்வர்களும் உறங்கிப் போய்விட்டனர். புரோசனனும் மதுவை மிக அருந்தி மிகவும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். தக்க சமயம் இதுவென உணர்ந்த யுதிஷ்டிரர், தம்பியருடனும் தாயுடனும், மாளிகையில் இருந்து வெளியேற முடிவு செய்து, மாளிகையின் முன்புறமாகப் பீமன் தீவைத்துப் பின்புறம் சென்று சுரங்கப்பாதையூடு நடந்து சென்று வனத்தின் மையப்பகுதியை அடைந்தனர்.

---

நன்றி கெட்டவன் மனிதன், நன்றியுள்ளது தெய்வம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகை தீப்பற்றி எரிந்தது. எளிதில் தீப்பற்றும் தன்மைகளுடன் மாளிகை அமைக்கப்பட்டமையாலும், நகரமாந்தரும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த வேளையாயிருந்தமையாலும் மாளிகை முற்றாக எரிந்து சாம்பராகியது. விடிந்ததும் மக்கள் மிக்க துயருடன் மாளிகையை நோக்கி வந்தனர். பாண்டவர்கள் என்ன ஆனார்கள் என்பது அவர்களின் கவலைக்குக் காரணமாகவிருந்தது. தீயை அணைத்து உட்புகுந்து மக்கள் பார்த்த வேளை வாயிற் படியருகில் புரோசனனின் உடல் கருகிக் கிடந்தது. உள்ளே ஐந்து புதல்வர்களினதும் தாயினதும் உடலும் அருகருகே கருகிக் கிடந்தன. பாண்டவர்கள் இறந்துவிட்டனர் என்றே மக்கள் பெருங் கவலை கொண்டனர். தாயுடன் ஐந்து புதல்வர்களும் இறந்து கிடந்தமை மக்களை அவ்வாறு நினைக்கத் தூண்டியது. மக்கள் பாண்டவர்களின் வீரத்தையும், பண்புகளையும் நினைத்து நினைத்துக் கவலை கொண்டனர். முடிவில் இச்செய்தியை அஸ்தினாபுரத்துக்குத் தெரிவிக்கும் பொருட்டு ஆட்களை அனுப்பி வைத்தனர்.

பாண்டவர் இறந்தனர் என்ற செய்தியறிந்த திருதராஷ்டிரனின் உள்ளம் மகிழ்ந்தது. அதனால் மிகவும் கவலைப்பட்டவன் போல் நடித்து அச்செய்தியை விதுரர், பீஷ்மர் முதலானோருக்கு அறிவித்தான். துரியோதனன், கர்ணன், சகுனி என்போர் பாண்டவர்கள் இறந்தார்கள் என்பதனால் மிக்க களிப்படைந்தனர். பீஷ்மர் பெரும் கவலை கொண்டவராய் பாண்டவர்கட்கு ஈமக்கிரியைகள் செய்ய முனைந்தார். ஆனால், விதுரர் பாண்டவர்கள் இறந்திருக்கமாட்டார்கள் என்று பீஷ்மருக்கு ஆறுதல் கூறினார். நகரமக்கள் அனைவரும் மிக்க கவலை கொண்டு, துரியோதனனையும் திருதராஷ்டிரனையும் ஏசி இகழ்ந்தனர். நகரமே துன்பக் கடலில் மூழ்கியது.

தீயோரின் செயல்கள் எத்தகையன என்பது அவர்களுக்குப் புரியாது. பேராசையும், பொறாமையும் எவனிடம் குடி கொள்கிறதோ அவனிடமிருந்து சத்தியம், தர்மம் என்பன விலகிவிடும். சத்தியத்தைக் கடைப்பிடிக்க முடியாதவனால், எத்தீமைகளையும் செய்ய முடியும். பேராசையும் பொறாமையும் கொண்ட வஞ்செஞ்சனான துரியோதனன், பாண்டவர்களை நாட்டை விட்டு வெளியேற்றியதுடன் மட்டும் அமையாது தொடர்ந்து சென்று அவர்களை முடித்து அவர்களின் வாழ்விற்கு முற்றுப் புள்ளி வைக்கவும் முயன்றே புரோசனனை அனுப்பி வைத்தான். ஆனால் எழுதிச் செல்லும் விதி மாறுவதில்லை. தர்மம் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற நியதி இருக்கும் போது அதர்மம் தலைதூக்குவது போல் ஆக்கி முடிவில் தர்மமே வெல்லும். தர்மதேவதையின் புதல்வனான விதுரர் மூலம் பாண்டவர்கள் காப்பாற்றப்பட்டது இதனால் தான். தர்மம் தன்கைகளைப் பலமாக விரித்து வைத்திருக்கிறது. ஆனால் நாம்

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை கேவலமான வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கண்டுகொள்வதில்லை. தீமையின் வடிவான புரோசனன் அரக்கு மாளிகையிலே இறந்து போகிறான். அதர்மத்துக்குத் துணைபோபவர்கள் இக்கதியே அடைவார்கள் என்பது வெள்ளிடை மலை. தர்மம் குன்றி அதர்மங்கள் நிறைந்த இக்கால கட்டத்தில் இப்படியான சின்னஞ் சிறுசம்பவங்களும் எவ்வாறு தர்மம் பாதுகாக்கிறது, எவ்வாறு தர்மம் நிலைநிறுத்தப்படுகிறது, அதர்மத்திற்குத் துணைபோபவர்கள் எக்கதி அடைவர் என்பதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். பாரதத்தில் வரும் அத்தனை சிறுசம்பவங்களுமே மிகவும் ஆழமான பொருள் பொதிந்து விளங்குகின்றன. எனவே, பாரதத்தின் பகுதிகளை மேலும் விபரித்து வரும் தொடர்கள் எவ்வாறு எமக்குப் பாடம் போதிப்பவையாக அமையும் என்பதனையும் தொடர்ந்து விளக்குவோமாக.

# இடும்பன் வதம்

சுரங்கப்பாதையினூடு தீயிடப்பட்ட அரக்கு மாளிகையிலிருந்தும் வெளியேறிய பாண்டவர்கள் அடர்வனத்தை அடைந்தனர். முன்னேறி விரைவாக நடந்து செல்ல முடியாதவாறு மரங்களும் செடிகளும், கொடிகளும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து வளர்ந்திருந்தன. பாண்டவர்களும் களைப்புற்றிருந்தனர். இதனைக் கண்ணுற்ற பீமன், தனது தாயைத் தோள்களில் தூக்கினான். முன்னே விரைந்து சென்று மரங்கள் முதலானவற்றைத் தனது கைகளினால் விலக்கிப்பாதை ஏற்படுத்திச் செல்லலானான். பீமனைத் தொடர்ந்து ஏனைய பாண்டவர்களும் செல்லலுற்றனர். நாட்டின் இருந்து வெகுதொலைவு சென்றுவிட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகவிருந்தது. மேலும் தொடர்ந்து நடந்த பாண்டவர்கள் மிகவும் களைப்படைந்தனர். எல்லோருக்கும் தாகம் உண்டாயிற்று. பீமன் மட்டும் களைப்படையாது இருந்தான். அப்போது குந்திதேவி தண்ணீர் எடுக்க வசதி இருக்குமா என்று வினாவினாள். தாயின் தாகத்தால் மிக்க கவலையடைந்த பீமன் சுற்றுப்புறம் முழுவதையும் ஆராய்ந்தான். தூரத்தில் நீர்ப்பறவைகளின் ஆரவார ஒலி கேட்பது புலனாயிற்று. எனவே எல்லோரையும் அவ்விடத்தில் அமர்ந்து களைப்பாறும்படி கூறித் தான் தண்ணீர் கொண்டு வரும் பொருட்டுப் பறவைகளின் ஒலி வந்த திசையை நோக்கி நடக்கலுற்றான். ஓரளவு தூரம் சென்றதும் நீர்நிலை ஒன்றை அடைந்தான். தான் முதலில் நீரருந்தித் தனது தாகத்தைத் தணித்துக் கொண்டவனாய்க் குளத்தில் இருந்து பறித்தெடுத்த தாமரை இலைகள் மூலம் நீர் கொணர்ந்து தாயினதும், சகோதரர்களினதும் தாகத்தைத் தணித்தான். மிகவும் களைப்படைந்த குந்திதேவியும் மற்றைய பாண்டவர்களும் நீர் அருந்தியதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயாசமேலீட்டால் தூங்கத் தலைப்பட்டனர். அடர் வனம். எனவே அவர்களின் தூக்கத்துக்குப் பங்கம் ஏற்படாவகை, பீமன் தூக்கமின்றி அவர்களைக் காவல்செய்து நின்றிருந்தான்.

இவர்கள் இவ்வாறு தங்கியிருந்த வனத்திலே "இடும்பன்" என்னும் கொடிய அரக்கன் தனது சோதரியாகிய "இடும்பி" என்பாளுடன் வசித்து வந்தான். அவர்கள் மனித மாமிசம் புசிப்பதில் நாட்டம் உள்ளவர்கள், பாண்டவர்கள் இருப்பதனை மோப்பசக்தியால் உணர்ந்த இடும்பன் தன் தங்கையை நோக்கிப் "பெண்ணே இவ்வனத்தில் மானுடர் புகுந்துள்ளனர் போலத் தெரிகிறது. உடனே சென்று அவர்களைப்பிடித்து வா இன்று நமக்குப் பெருவிருந்து கிடைக்கப் போகிறது" என்று மகிழ்வுடன் கூறலானான். உடனே இடும்பியும் மோப்பமறிந்து பாண்டவர் இருக்கும் திசை நோக்கி வரலானாள் பாண்டவர்களை அணுகிய இடும்பி ஓர் பெண்ணும் நான்கு ஆண்களும் உறக்கத்திலிருப்பதனையும் மிகவும் பலம் பொருந்திய மனிதன் ஒருவன் அவர்களைக் காவல் செய்து நிற்பதனையும் கண்ணுற்றாள். பீமனின் பராக்கிரமத்தில் தனது உள்ளத்தைப் பறிகொடுத்து அவன் மீது அன்பு உண்டாக பீமனைத் தான் மணம் செய்து இன்பமாய் வாழ வேண்டும் என்ற எண்ணம் அவள் மனதில் தோன்றலாயிற்று. உடனே தனது அரக்க ரூபத்தைத் தனது மாயையினால் மாற்றி மிகவும் அழகிய மானுடப் பெண்ணின் உருவம் பெற்று மெதுவாகப் பீமனை அணுகினாள். பீமன் அவள் வருவதைப் பார்த்து மிகவும் சிந்தனைவயப்பட்டவனாய் அவளுடன் உரையாட முற்படுகையில் அவள் பீமனை நோக்கி" வீரனே! தாங்கள் யார்? உறங்கும் இவர்கள் யாவர்? இவ்வனத்திலே அரக்கர்கள் வாழ்வது உமக்குத் தெரியாதா? அதுவுமன்றி இங்கு வாழும் அரக்கர்கள் நரமாமிசம் புசிப்பவர்கள். நீங்கள் வந்திருப்பதை உணர்ந்த என் அண்ணன் உங்களைப் பிடித்து வரும்படி என்னை அனுப்பியுள்ளான். ஆனால் எனக்கு உங்களைக் கொல்ல மனம் வரவில்லை என்று கூறலுற்றாள். அப்போது பீமன் "ஏ பெண்ணே நீ யாராகவிருப்பினும் எனக்கு அக்கறையில்லை உடனடியாக இவ்விடத்தை விட்டுச்செல்" என்று கூறினான். அதற்கு மறுமொழியாக இடும்பி "வீரரே எனக்கு உங்கள் மீது அன்பு ஏற்பட்டு விட்டது. நான் உங்களை மணந்து உங்களுடன் வாழப்போகிறேன். எனவே என் அண்ணன் வருவதற்கு முன் தூங்கும் இவர்களை எழுப்பு, நாம் என் அண்ணனிடம் அகப்படாமல் இவ்விடம் விட்டு விரைவாகச் செல்வோம். அவன் வந்தால் உங்கள் எல்லோரையும் கொன்று புசித்து விடுவான்" என்று கூறலானாள். இவ்வுரைகளால் கோபமடைந்த பீமன் "ஏ நீ என்னை யாரென்று நினைக்கிறாய், நான் உன்னை மணக்கவும் மாட்டேன், உன் அண்ணனுக்குப் பயப்படவும்

மாட்டேன் எனவே உடனடியாக இவ்விடத்தை விட்டுச்செல்'' என்று கோபமாக மொழிந்தாள்.

மானிடரைப் பிடித்து வரச்சென்ற தன் சகோதரி வருவதற்குத் தாமதிப்பதை உணர்ந்த இடும்பன் பாண்டவர்கள் இருக்கும் இடத்தை நோக்கிக் கோபத்துடன் விரையலானான். மானுட உருவெடுத்துத் தன் சகோதரி வந்த மனிதருடன் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்ட இடும்பன் பெருஞ்சீற்றமடைந்தவனாய் அரக்கர் குலத்துக்கே அவமானம் செய்தவளே, ஏன் இவனுடன் உரையாடிக் கொண்டிருக்கிறாய்? இதோ முதலில் அவனைக் கொல்கிறேன்'' என்று பீமனுடன் சண்டை போட முயன்றான். சகோதரர்களினதும் தாயினதும் உறக்கம் கலையாதிருக்கும் பொருட்டுப் பீமன் இடும்பனைத் தனது கரங்களினால் இறுக்கிக் கொண்டு கொஞ்சம் தூரத்துக்கு அப்பால் சென்று அவனுடன் போரிடலானான். பெரும் மரங்களையும் விருட்சங்களையும் பிடுங்கியெடுத்து இருவரும் மோதிக் கொண்டனர். பின்னர் ஒருவரை ஒருவர் கைகளினாலும் கால்களினாலும் தாக்கினர். இருவரும் சளைக்காது போரிட்டுக் கொண்டிருந்தனர்.

ஆரவார ஓசையைக் கேட்டுப் பாண்டவரும் தாயாரும் விழித்துக் கொண்டனர். தங்கள் அருகே அழகிய இளம்பெண் ஒருத்தி நிற்பதனைக் கண்ணுற்ற குந்திதேவி ''பெண்ணே நீயார்? ஏன் இங்கு நிற்கிறாய்? பீமனுடன் மல்யுத்தம் செய்யும் அரக்கன் யார்? என்று வினவினாள். இடும்பி எல்லாவற்றையும் எடுத்துரைத்துத் தனது விருப்பத்தையும் குந்திதேவியிடம் தெரிவித்துக் கொண்டாள். பீமன் கடுமையாக யுத்தம் செய்தும் இடும்பனைக் கொல்லமுடியாது இருப்பதனைக் கண்ணுற்ற அர்ச்சுனன் பீமனுக்கு உதவும் பொருட்டு அவர்கள் யுத்தம் செய்த இடத்திற்கு விரைந்து ''பீமா பொழுது புலரப்போகிறது, அரக்கர்கள் சந்திகாலங்களில் அதிக பலம் பெறுவார்கள் அதனால் அவனை விரைவில் கொல். நான் உனக்கு உதவி புரியவா? என்று கேட்டான். அர்ச்சுனனின் உரைகளால் ஆக்ரோஷம் அடைந்த பீமன் மிகக் கோபமாய்ப் போரிட்டு இடும்பனைக் கொன்றான். இடும்பன் வதைபட்டதைக் கண்ட பாண்டவர்கள் மகிழ்ந்தனர். அவர்களுடன் சேர்ந்து இடும்பியும் மகிழ்ந்தாள். யுதிஷ்டிரர் பீமனைப் பாராட்டி மகிழ்ந்தார். பின்பு இவ்விடத்தில் தங்கியிருக்காது அப்பால் சென்று தங்குவோம் என்று யுதிஷ்டிரர் மொழிந்ததற்கிணங்க பாண்டவரும் குந்திதேவியும் நடந்து சென்றனர். இடும்பியும் அவர்களுடன் கூடவே சென்றாள்.

இடும்பி தம்மைத் தொடர்ந்து வருவதனைக் கண்ணுற்ற குந்திதேவி ''ஏன் பெண்ணே எங்களுடன் வருகிறாய்'' என்று வினவினாள் அப்போது இடும்பி தனது விருப்பத்தை எல்லோருக்கும் தெரிவித்துக்

ஒருவன் ஏழையாக இருந்தால் தவறு அவனுடையதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள். அவளின் உரைகளைச் செவிமடுத்த பீமன் கோபமுற்றவனாய் "மாயம் வல்ல அரக்க குலத்தவளே" மந்திரங்களை புரிவதில் வல்லவர்களான அரக்கர் குலத்துப் பிறந்தவளான உன்னை நான் மணப்பதா? முடியவேமுடியாது உன் அண்ணனைக் கொன்றது போல் உன்னையும் கொல்லுவேன் பார் என்று அவளைக் கொல்ல முற்பட்டான். அப்போது யுதிஷ்டிரர் "பீமா! கோபம் கொள்ளாதே. வலிமையுற்ற வீரன் ஒருவன் பெண்ணைக் கொல்லலாமா? பொறு" என்று தடுத்தார். பின்னர் தாயுடனும் மற்றைய சகோதரர்களுடனும் ஆலோசித்துப் பீமன் இடும்பையை மணந்து கொள்ளும்படி பணித்தார். இதனால் அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது அவனுக்குக் "கடோத்கஜன்" என்று நாமம் சூட்டினர் கடோத்கஜன் பயங்கர தோற்றமுடையவனாய்க் காணப்பட்டான். பிறந்தவுடனே அவன் பாண்டவர்களையும் குந்திதேவியையும் வணங்கி "இராவணனுக்கும் இந்திரஜித்துக்கும் நிகரான பலம் எனக்குண்டு. தேவை ஏற்படின் என்னை நினையுங்கள் நான் உங்களுக்கு உதவி செய்வேன்" என்றுகூறி வடதிசை நோக்கிச் சென்றவனானான். இடும்பியும் மகனுடன் சென்றாள். அதன்பின்னர் பாண்டவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று வேறொரு வனத்தில் வசித்து வந்தனர். அப்போது வியாசமகரிஷி பாண்டவர்களை வந்து சந்தித்தார்.

வியாச மகரிஷியின் வருகையால் உள்ளம் களி கொண்ட பாண்டவர்கள் அவரை வரவேற்று வணங்கி நின்றனர். அப்போது முனிவர் பெருமான் அவர்களை நோக்கி "பரதகுலதிலகங்களே துரியோதனனின் செய்கையால் பெரும் துன்பமடைந்துள்ளீர்கள். ஊழ்வினை உங்களை இப்படித் துன்பப்படுத்துகிறது. பொறுமையுடன் இவ்வனத்திலே ஆறு மாதங்கள் மறைந்திருங்கள். அதன் பின்னர் அயலில் இருக்கும் ஏகசக்கரம் சென்று உங்களை வெளிப்படுத்தாது மறைந்திருந்து வாழுங்கள் அங்கு நான் உங்களைச் சந்திப்பேன். கவலையை மறந்து வாழப்பழகுங்கள் இன்னும் சிறிது காலத்தில் உங்கள் வாழ்க்கையில் அதிசயிக்கத்தக்க நல்ல முன்னேற்றம் நிகழப்போகிறது. எனவே பொறுமையுடன் இருங்கள்" என்று ஆறுதல் கூறிச்சென்றார்.

பாண்டவர்களும் அவ்வனத்திலே ஆறுமாதம் தங்கியிருந்தனர். அப்போது வேதங்களைக் கற்றுத் தெளிந்தனர் இப்போது பாண்டவர்களின் உருவம் மாறுதலடைந்து விட்டது. ரிஷி குமாரர்கள் போன்று சடையும் தாடியும் மரவுரியுடனும் வனத்தைவிட்டுப் புறப்பட்டு அருகே இருக்கும் நாடொன்றை நோக்கிச் செல்லலாயினர்.

தொடரும்......

சிவத்திரு. வ. குமாரசாமிஐயர்

★ உண்மை எங்கே இருந்தாலும் அதை பின் தொடருங்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிர்கள்

## அக ஒளி

பிறவிக்குருடனான ஒருவன் நாள்தவறாது தினம் தோறும் அருகிலுள்ள ஆலயத்திற்கு சென்று தொண்டுகள் பல செய்வான். இறைவனிடம் இந்தக் குருடன் வாழ வழிகாட்டும் அம்மாதாயே அந்தச் சிறப்பினைவது நல்லகதியடைய அருள் பாலியுங்கள் என வேண்டிக் கொள்வான். பெற்றோருக்கும் வேதனை ஆனால் கல்விநிலையம் தெரியாத இவன் நல்ல முறையில் தாளம், மத்தளம், உடுக்கு, மேளம், ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகள் இயக்கும் சக்தி கிடைத்துள்ளன. இறைவன் அருளால் புறஒளி அற்ற இவனுக்கு அகஒளி ஒளிவிடத் தொடங்கியது. இதை அறியாத அகஒளி அற்ற பலர் இவன் பகலில் தடியுடன் செல்வதையும், இரவில் மறுகையில் விளக்குடன் செல்வதையும் பார்த்து ஏளனம் செய்வர். நல்ல திடகாத்திரம் உள்ள இவன் தடியுடன் செல்கிறானே, பாம்பு, நாய்வந்தாலும் தெரியாதே. அப்படியிருக்க பாம்படிக்க தடியுடன் செல்கிறார் என்றும் உலாத்துக்கம்புடன் உலாவரச் செல்கிறார் என்று கூறிக் கேலி செய்வார்கள். இவ்வகக் குருடர்களின் வார்த்தைகளை காதில் வாங்காது தான் உண்டு, தன் தொண்டு உண்டு, நன்நிலையுண்டு என செவிடன் போல் சென்று இறைவனிடம் சொல்வான். வேண்டினால், அவன் அருளால் அகவொளி பெற்ற நிலைக்கு வந்து கொண்டிருப்பதை யார் அறிவார்.

இவன் அயலில் வாழ்ந்த ஆணவம் அகந்தையுள்ள பணக்காரன் ஆடம்பரமாக ஆலயம் செல்வான், வணங்குவான், தினமும் நைவேத்தியங்கள், பூசைகள் யாவும் சிறப்பாகச் செய்விப்பான் ஆலயக் குருக்கள், மற்றவர்கள் பெருமதிப்பு கொடுப்பர். குருடனை ஏளனம் செய்பவர்கள் இப்பணக்காரனைக் கண்டதும் மதிப்பு மௌனம் யாவும் நிலவும். குருடன் உருவாக்கிய பூமரத்திலிருந்தே பூப்பறித்து மாலை தொடுத்து இறைவனுக்குச் சாத்தினார்.

நாளடைவில் குருடன் சரியைத் தொண்டு செய்து வந்தவன் படிப்படியாக இசைத் தொண்டும் புரியத்தொடங்கினான் இதைப்பார்த்த பெற்றோர் மற்றோர் ஏளனம் செய்தவராயால் போற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. பலவித அமுதுகள், பழவகைகள் வைத்துப் பூசை செய்

அக்காளும் வரவேண்டும் அரிசியும் தீரக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கும் பணக்காரரின் வேண்டுதலை நிறைவேற்றிவிட்ட தாயார் தலைவனிடம் இனிமேல் இப்படி எல்லாம் ஆராதனை செய்விக்கும் அன்பருக்கு உபகாரம் செய்ய வேண்டாமா? ஏதாவது செய்யுங்கள் செல்வம் கூடினால் இன்னும் சிறப்பாகச் செய்வாரே என்றார். செய்வோம் என்றார் தலைவன்.

அதற்குமுன் இவர்களின் மனநிலையைக் காட்ட எல்லையில் சிவன் இந்தக் குருடன் பார்வை இல்லாதவன் இருளில் இருப்பவன் இரவில் விளக்கொளியுடன் செல்கிறானே எதற்கு இவனுக்கு விளக்கொளி என விசாரிப்போம் எனக் கூறி சிறுவர்களாக மாறி முன் தோன்றி அப்பனே உமக்கு இரவும் பகலும் ஒன்றுதானே இருளிலேயே இருக்கின்றீர். ஆனால் இரவில் விளக்குடன் செல்கிறீர் இதனால் உனக்கு ஒருவித பயனும் இல்லையே பொல்லுடன் செல்கிறீர் பாம்பு போன்ற விஷ ஜெந்துக்கள் வந்தாலும் நாய் வந்தாலும் உங்களுக்குத் தெரியாதே அப்படி இருக்க பொல்லு எதற்குக் கொண்டு செல்கிறீர் என்று கேட்டனர்.

குருடன் அவர்களை நோக்கி கண்பார்வை இழந்தவை நீங்கள் கூறும் புறப்பார்வை இல்லை. புறத்திலே இருள் சூழ்ந்துள்ளது ஆனால் எனது அகத்திலே இருள் அகன்று விட்டது. அங்கு ஒளி உண்டு. பார்வையுண்டு ஆகவே நான் முற்பிறப்பில் செய்த கர்மவினைக்கேற்ப இப்பிறப்பில் புறக்குருடனாகி விட்டேன். ஆனால் இறைவன் பிறவிக்குருடனாக இருக்கும் எனக்கு இறை தொண்டு செய்யும் வலிமையை சக்தியைத் தந்துள்ளான். ஆகவே எனது அகக்கண் ஒளியால் கல்வியறிவு இல்லாது இருந்தாலும் இறைவனுக்கு பல தொண்டு செய்யும் அக ஒளியைத் தந்துள்ளான். புற ஒளியால் மற்றவற்றைப் பார்த்து பேராசைப்படுவதிலும் பொறாமைப்படுவதிலும் இருந்து காப்பாற்றியுள்ளான்.

நான் இருளில் சென்றே பழக்கப்பட்டவன். பார்வையுள்ளவர்கள் தங்களுக்கு யாவும் தெரியும் என்ற அகந்தையினால் விளக்கின்றி இருளில் வந்து மோதுப்பட்டு விழுந்து முறிந்து அவஸ்தைப்படுகிறார்கள். அப்படி வந்து என்னுடன் மோதி விழுந்து அதன்பயனாக எனக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் - என்செய்வது - யார் பார்ப்பது என்பதற்காக நான் கொண்டு வரும் வெளிச்சத்தில் எதுவித கஷ்டமும் இன்றி செயல்பட முடியும் அல்லவா? அவர்கள் தங்களுக்கு கண்பார்வை உண்டு என்றும் அகந்தையில் இருட்டில் வந்து மோதிவிடுவார்கள் அதனால் எனது விளக்கு வெளிச்சத்தில் விலகிச்செல்வார்கள் அப்படி விலகிச் செல்வதால் எல்லோர்க்கும் நன்மையுண்டு அல்லவா அதற்காகவே கொண்டு செல்வேன் என்றான். விளக்கு அதற்காகவே ஆனால் பொல்லு எதற்கு அதுவா

அதனால் அதன் உதவியுடன் பாதையின் உள்ள பொருட்களால் தட்டுப் படாமல் செல்ல முடியும் புதிதாக ஏதாவது இருந்தால் தட்டுப்படும் அதனுடன் மோதுப்படவோ தட்டுப்பட்டு விழவோ நேரிடாது தப்ப முடியும். அன்றியும் இந்த ஒலி ஏற்படுத்தும் சத்தத்தினால் மற்ற ஜெந்துக்கள் தாங்களாகவே ஒதுங்கிவிடும் என்பதினால் இருபகுதிக்கும் பாதுகாப்பு கிடைக்கிறது என்று கூறினான்.

கண்கெட்ட கடவுள் உனது கண்களையா மறைத்துவிட்டார் அப்படியிருக்க ஏன் அப்பா இப்படிக் கஷ்டப்பட்டு நீர் வாழ்கிறீர் கேட்கிறார். இப்படிச் சொல்லும் உனக்கு கண் தெரியுமானால் என்னவை அழகாக புனிதமாகச் செய்வாய் அப்பா என்றார். நடப்பவையாவும் நன்மைக்கே என்பதுபோல் பார்வையை தராது விட்டமையால் தானே எனக்கு எதுவும் தெரியவில்லை. இதனால் போட்டி, பொறாமை, எரிச்சல், சண்டை சச்சரவுகள் தோன்றும். கண் தெரியாதபடியால் எதுவித பிரச்சினையும் இன்றி எனது தொழிலை செய்கிறேன். இறைவன் புறஒளியை தராவிட்டாலும் முக்கியமாக தேவையான அகஒளி தந்துள்ளார். அதுவே பெரும்பாக்கியம் என்றான். அடுத்த பிறப்பிலாவது நல்லகதி இறைவனைப் பிரியாது அவருக்கு தொண்டு செய்ய அருள் பாலித்தால் போதும். அதுவே அடியேனாகிய அந்தகன் வேண்டுவது என்னால் முடிந்த தொண்டைச் செய்கிறேன் என்றான்.

பணக்காரனோ இன்னும் பணம் வேண்டும் இராஜவாழ்க்கை வாழ வேண்டும் சகலரும் தனக்குக்கீழ் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் எனவே செல்வமும் செல்வாக்கும் விரும்பியே செய்கிறான். சரி உமது ஆசைப் படியே செல்வம் கொடுக்கிறேன் பயன்படி பெற்றுக்கொள்ளட்டும் என் றார் இறைவன். இவர்கள் வரும் வழியில் பொன்முடிச்சைப் போட் டார். பூசை முடிந்து வரங்கள் பெற்றுக்கொண்டு வரும் வழியில் அகந் தையால் அகங்காரம் ஏற்பட இந்தக் குருடன் பெரிய சாதனையைப் படைக் கிறான். அவன் தடியுடன் நடக்கிறான் நான் தடியில்லாமல் நடப்பேன் பாதைதவறாது செல்வேன் என்று பொன்முடிச்சிருக்கும் இடத்திற்கு கிட்டவர கண்மூடி நடந்தான். இச்செயலால் அவனது கண்ணில் பொன் முடிச்சு தென்பட முடியவில்லை பின்னால் வந்த அந்தகன் காலில் தட் டுப்பட அதை அவன் பெற்றுச்சென்று வறுமையில் வாடிய அவனது பெற் றார் சகோதரம் நல்நிலையடைய வழி சமைத்துள்ளதுடன் ஆலயத்தில் பல திருப்பணிகளைச் செய்வித்தான். தேவி இப்போ பார்த்தாயா? உன் விருப்பப்படியே செல்வத்தைக் கொடுத்தேன் அகந்தை அகங்காரம் கண்ணை மறைத்துவிட்டது. இருதய சுத்தம் விசுவாசம் செல்வம் கிடைக்கும் நிலை ஏற்பட்டது. அவனுக்குக் கிடைத்தால் மாடிவீடுகட்டிடுவான் இன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தைத் தொடும். அந்தகனோ திருப்பணி வேலைகள் செய்கின்றான். இறைதொண்டு தொடர்கிறது. பார்த்தாயா மின்னலெல்லாம் பொன்னல்ல. வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்காதே என இறைவன் கூறினான்.

இதையறிந்த பணக்காரன் ஆச்சரியப்பட்டான். பொறாமைப்பட்டான் கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் எதற்கு எனது அகந்தையால் தானே அவனுக்கு இந்நிலை ஏற்பட்டது. அமைதியாகச் சிந்தித்தான். வேதனையை விடுத்தான். கண்ணிருந்தும் குருடானேன். அவனுக்கு அகவொளி உண்டு கல்வியறிவையும் தெரியாதவன் படித்து, மத்தளம் ஆர்மோனியம் போன்ற இசைக்கருவியை பயன்படுத்துகிறான், பாடுகிறான் பார்வை உள்ளவன் போல நீர் மொண்டு மரங்களுக்கு ஊற்றுகிறான். கூட்டுகிறான் இறைவன் அவனுக்கு அகவொளி கொடுத்து அருள் பாலித்துள்ளார் போலும் இவ்வருளை செல்வத்தால், புகழ், கீர்த்தி, குலத்தால் பெறமுடியாது இச்செல்வம் புகழ், உற்றார், உறவினர், மனை, மக்கள் எதுவும் வரமாட்டாது. அவன் அருள்தான் நற்கதி அடையவைக்கும் என்பதை உணர்ந்து எனது அகக்கண்ணைத் திறந்து விட்டாய் என அந்தகன் காலில் விழுந்தான் மற்றவர்களுக்கு நற்போதனை செய்தான் தொண்டுகள் செய்ய உற்சாகம் ஊட்ட தொடங்கினான் தானும் செய்தான்.

கஜபாலசுவாமிகள்

நீங்கள் உங்கள் உடல், மனம், உடைமைகள் அனைத்தையும் இறைவனின் தொண்டிற்காகப் பயன்படுத்த வேண்டும். அமைதியாக உட்கார்ந்து கொண்டு வெறுமனே ஜபம் செய்தால் மட்டும் போதாது.

எப்பொழுதும் மற்றவர்களுக்கும் கொடுக்கும் நிலையில் இரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மீகத்திற்கு ஆலய வணக்கம் தேவைதானா?

சென்றவித் திறக்குஞ் செய்கைக் கேதுவா மயனாய் மாலாய்
அன்றவன் றனுமாய்த் தாமே யமர்ந்த மூர்த்தியாய் நிற்கும்
ஒன்றதாந் தனுமா யின்பப் புணரியா தவனாய் நாளும்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின்றேனே.

சிருஷ்டி ஸ்திதி சங்காரம் என்னும் முத்தொழிற்கும் ஏதுவாகிய பிரம்மனும்மாலும் விஷ்ணுவாகியும் மாட்சிமையுள்ள உருத்திரனாகியும் இன்னும் அனேக வடிவங்களாகியும் இருக்கின்ற பூரணமான மூர்த்தனுமாகியும் ஆனந்த சாகரத்தில் உதிக்கும் ஞான சூரியனாகியும் சதோதய மகிமைபெற்ற சுத்த சைதன்னியமான பிரம்மஸ்வரூபத்தை வணங்குகின்றேன்.

தனது ஸ்புரணமெல்லாந் தனது வடிவமாக விளங்கும் என்பதால் 'அயனாய் மாய மாலாய் ருத்திரனுமாய்த் தானேயானந்த மூர்த்தியுமாய நிற்கும் எல்லாவும் பேரின்ப விளக்கமே தன்மயம்' என்பர். 'இன்பப்புணரியா தவன் என்பது உற்பத்தி லயங்களின்றி விளங்கின சுத்த சைதன்னியம் என்பவர் நாளும் தோன்றியவிமல போத சொரூபம் எனவும் கூறினார்.

சர்வம் பிரமமயம் என்னும் உபதேச வாக்கியபடிக்கு ஸ்வரூப சாக்ஷாத்காரமான சுத்த சைதன்னியத்தை துதி செய்ததாம்.

ஓசை உற்ற கல்லைநீர் உடைத்து இரண்டாய் செய்துமே
வாசலில் பதித்தகல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்துறீர்
ஈசனுக்கு உகந்தகல் எந்தக்கல்லு சொல்லுமே.

ஒரு சிற்பாசாரி குற்றமில்லாது சாத்திர விதிகளுக்கமைவாக கல்லைத் தேர்ந்தெடுத்து ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்கு ஆசாரியன் கொடுத்த அளவு பிரமாணத்தின் படிக்கு சிவபெருமானோ விநாயகரோ சுப்பிரமணியரோ வேண்டிய உருவத்தை தட்டிப்பார்த்தோ ஒலியுள்ள கல்லைத் தேர்ந்தெடுக்கும் போது ஒரு பாதிக்கல்லில் உருவம் அமைகிறது. மறுபாதி கல்லுரிக்கப்படுகிறது கழிந்த பாகம் வீட்டுப் மிதிகல்லாக வைக்கப்படுகிறது விக்கிரகம் அடித்தகல்லில் பூவும் தண்ணீர் ஊற்றி பூசனைக்குரிய கல்லா கழித்து ஈசனென்று வணங்குகின்றீர் இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிக்கல்லாக வைத்து பாதிக்கல்லும் சகல்லன்று பூவும் நன்னாரி வாற்றிய மறு பாறிக்கல்லும் ஒன்றே அல்லது இரண்டல்லவே எனவே தன்மை அறிந்த பேரறிவாளர்கள் ஞானிகள் தாம் கல்லில் விருப்பங்களை செய்து ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து உண்மையை உணர முடியாத ஆத்மாக்கள் இப்பிறவியிலிருந்து கடைத்தேறி உய்யும் பொருட்டு மனமிரங்கி விக்கிரக வழிபாட்டு முறைமையையும் தத்துவத்தையும் ஆலயம் அமைக்கும் அளவு பிரமாணங்களையும் அறுதியிட்டுக் கூறிச் சென்றனர். அது பின்வருமாறு இயற்கையின் பேராற்றல் அண்டசராசரங்களுக்குக் கருப்பொருளாய் என்றும் அழியாப் பஞ்ச பூதங்களான பிருதுவி அப்பு, தேயு, வாயு, ஆகாயமென நாமம் பூண்டு தனித்தும் பரந்தும் விரிந்தும் முடிவற்ற தோற்றமும் அறியமுடியாமல் வடிவமாய் இயங்கும் மகா சக்தியின் பேரருளால் மனிதனை முதல் ஊர்வன ஈறாக எழுவகைப் பிறப்புக்கள் எடுத்து இருவினைகளுக்கட்பட்டு அலைகின்ற ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டு இறைவன் மனமிரங்கி பரம்பிரமம் என்ற நிலையிலிருந்து கீழிறங்கி படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் என்ற ஐந்து கிருத்தியங்கள்செய்வதற்கென்றே திருவுளமிரங்கி பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் என்ற திருவுருவங்களை எடுத்து பேரருள் புரிகின்றார். ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு ஆன்மாக்களிற் சிறந்த பிறப்பெடுத்த மனிதர்களுள் பேரருளாளர்களான ஞானிகள் சித்தர்கள் அருளாளர்கள் மனமிரங்கி ஆசிரியர்கள் மாணவர்கள் கல்வி மூலம் அறிவு ஒழுக்கத்தைப் புகட்டுவதுபோல ஞானிகள் அறிவாளர்கள் அறிவிற் குறைந்தவர்கள் ஆன்ம ஈடேற்றம் பெற வழி தெரியாதவர்களுக்கு உருவ வணக்கம் மூலம் உய்யும் பொருட்டு ஆலயம் அமைத்து இறைவனை கல்லில் செய்து பிரதிஷ்டை செய்து சொல்லப்பட்ட விதிப் பிரமாணம் குண்டம் அஷ்டபந்தன மருந்துசாத்தி கெட்டிக்கவே கும்பாபிஷேகஞ் செய்து வணக்கத்திற்குரிய ஆலயமாக ஆக்க வேண்டும். சில சமய வழிபாட்டினர்கள். உருவ வழிபாடுகளை ஏற்க மறுக்கிறார்கள்.

இந்து சமய வழிபாட்டு முறையில் பூஜ்யமே பூரணத்துவம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒன்றும் இல்லாத பொருள் ஒன்றினால் பூரணத்துவம் பெறுகிறது இவ்வுடலில் தங்கும் உயிரை ஆன்மா என்றும் அருவமான விதமான கலை நிறம் உடையது அதன் ஆழம் பரப்பு என்று அறிய முயற்சி செய்தால் அறியமுடியும் ஆனால் சமுத்திரத்தின் ஆழம் அகலம் என்பதனை அறிய முடியாதனைப்போல ஒருவர் தன்னை இயக்கி வரும் ஆன்மாவை கண்ணால் பார்க்க முடியாவிட்டாலும் இயற்கையின் கால மாற்றத்திற்கேற்றபடி ஒத்துழைத்து எதிர் வினைகளினால் தனக்கு இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாவேனோ என்பதை அறிந்து விழித்து நடந்து கொண்டிருப்பார். இவைகளெல்லாம் எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பால் நினைவுகளால் வருவன அல்ல எங்களை எல்லாம் உள்ளிருந்து ஆட்டுவிக்கும் ஆத்மா என்ற இரகசியம் பொருளான சிவாத்மா என்பதை சிந்தனைக்கு எடுக்க வேண்டும் சிவாத்மா தனக்கென்று போர்வையை எடுத்து அப்போர்வையிலுள் ஒளிந்திருந்து தன்னைக்காட்டாது முத்தொழில் புரிந்து கொண்டு ஒரு உலகை ஆட்சி செய்வது போல இயற்கை என்ற பெருவெளி பிரமாண்ட உலகம் என்ற உரு எடுத்து அதற்குள் தான் ஒழிந்திருந்து ஐந்து பூதங்கள் அண்ட சராசரங்கள் உள்ளடக்கியும் அதற்கு அப்பாலுக்குக்கப்பாலுமாய் நின்று பரமாத்மா, சிவாத்மா ஒன்றான பொருள் என்பதை ஒருவரும் அறியாமல் நிற்பதை பாசம் என்ற மயக்கத்தினால் மறைந்து உலகதத்துவமனைத்திற்கும் தானே அதிபதி என்பதை அறிந்த ஞானிகளுக்கு பசுபதி என்றும் அறியாத அஞ்ஞானிகளுக்கு பசுபதி + பாசம் என்ற மயக்கமுமாய் விளங்கி நின்று ஆட்சி செய்கிறான்.

---

அனாதி முத்தரான முதல்வன் அனாதி பெளத்தர்களாகிய ஆன்மாக்களின் கன்மத்திற்கேற்பப் பலசமயங்களை வேதத்தில் வகுத்து வைத்தனர். அவ்வேதம் காரணமாகவே அவ்வச் சமயத்தினர்கட்கு ஏற்பட்டுள்ள சாத்திரங்களும் பலவாயின அவ்வச்சாத்திரங்களில் பிரதிபாதிக்கப்படும் ஆன்ம இலக்கணங்களையும் அனான்ம இலக்கணங்களையும் பரமான்ம இலக்கணங்களையும் தெரிந்து கொள்வதற்குக் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அவ்வச் சமயங்கட்கு ஏற்றவாறு பரிபாஷையமைப்பினால் எளிதில் அறிதற்கு ஏலாதபடியிருக்கின்றமையினைக் கருதி அவ்வச் சமயங்களில் வல்லவர்களாகிய பெரியோர்கள் தங்கள் தங்களுக்கு உரிய சாத்திரங்களுக்குச் சோபானமான எளிய வசனநடையில் சிவப்பிரகாச கட்டளை, திருவாலயக் கட்டளை வேதாந்தத் தத்துவக் கட்டளை ஆராதனா ஸ்ரீவைராக்கிய சிந்தாமணித்தத்துவ தீபிகை, ஞானக்கட்டளை, தத்துவாமிர்தக்கட்டளை, நாதாசிவஷாதக் கட்டளை, வேதாந்தசகாரியக் கட்டளை, உபநிதாசித்தாந்தக்கட்டளை, சித்தாந்த தத்துவலக்ஷணம் ஆகிய இவைகளைச் சிறுசிறு நூல்களாகவே எழுதியுள்ளனர். இந்நூல்கள் பெரும்பாலும் கட்டளைகள் என்கிற பெயரினால் வழங்கி வருகின்றன. இவைகளுள் சில சித்தாந்த விதிகளுக்கும் சிலவேதாந்த விதிகளுக்கும் உரியனவாம் இக்கட்டளைகள் சித்தாந்தத்தில் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டனவேயாயினும் தங்கள் தங்கள் சமய உண்மைகளை ஆராய புகுவோர் மற்றச் சமயத்தினர் கொள்கையினையும் அறிந்து கொள்ள வேண்டியது மிகமிக நலமாதலின் இருவகைப்பட இப்பதினான்கு கட்டளைகளையும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன.

இது கட்டளைக் கொத்திலிருந்து

சிவம்

---

பக்திதான் பக்தியின் பதிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து நின்ற தாய்

பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைந்து நிற்பது இறை. அது நாம ரூபமெல்லாம் கடந்தது. ஆனால் ஆன்மகோடிகள் மேல் கொண்ட பெருங்கருணையினால், அவர்களுக்கு அகப்படக்கூடிய முறையில் இறங்கி வருகிறது. வடிவமெல்லாம் கடந்த பொருள் திருவுருவம் தாங்கி வருகிறது. பெயர் கடந்த பொருள் பெயரும் தாங்கி வருகிறது.

''ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ''

என்பது மணிவாசகம். இறைவனுடைய கருணையின் பெருமையை உவமையால் விளக்க முடியாது. பொருளின் உணர்த்தப்படுகிற பொருளை விட உவமை உயர்ந்த பொருளாய் இருக்க வேண்டும். இறைவனுடைய பெருங்கருணைக்கு உவமையாக ஒரு பொருளைச் சொல்ல வேண்டுமானால் அதனை விட உயர்ந்த பொருள் இருக்க வேண்டுமே? எனவே அதனைத் தனிப்பெருங்கருணையாக நினைந்து போற்றும் நிலையில் அதற்கு உவமை சொல்ல இயலாது.

''ஓருவமனில்லி'' என்பார் அப்பர் பெருமான். ஆனால் அருளாளர்கள் தங்கள் ஆர்வம் காரணமாக உவமை கடந்த பொருளுக்கும் உவமைகள் சொல்வார்கள். உலகியலில் உள்ள உவமைகளை எடுத்துக் காட்டுவார்கள். தாய் ஒருத்தி தன் குழந்தை மேல் உள்ள அன்பின் காரணமாக எத்தனை தியாகங்களையெல்லாம் செய்கின்றாள்! அதற்கு குறிப்பறிந்து பால் தருகிறாள். உணவு தருகிறாள். அதற்கு நோய் வந்தால் மருந்து தருகிறாள். சிலவேளைகளில் குழந்தைக்காகத் தானே மருந்தும் உண்கிறாள். எனவே அருளாளர்கள் உலகியலிலே காணப்படும் ஒப்புயர்வற்ற தாயன்பின் பெருமையை இறைவன் ஆன்ம கோடிகள் மேல் சொரியும் கருணைக்கு உவமையாக எடுத்துக் காட்டுவார்கள். உருவகமாகவும் காட்டுவார்கள்.

''அப்பன் நீ அம்மை நீ''
''ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்''
''அன்னே உனக்காளாய்''
என்பன அருமையான தேவாரத் திருவாக்குகள்.
''அம்மையே அப்பா''
''தாயேயாகி வளர்த்தனை போற்றி''
என்பன திருவாசகத்தேன் துளிகள்.

வேகமாகச் செயற்படு; விவேகத்தைக் கடைப்பிடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியலில் தாய் தன் சேய் மேல் காட்டும் அன்பைவிட, ஆன்ம கோடிகளின் மேல் இறைவன் சொரியும் பேரருள் மிகமிக உயர்ந்தது. ஒருவர் ஒரு பிறவியிலே ஒரு குறிப்பிட்ட காலம் தான் தாயன்பை உணர்வார். மேலும் மானுடம் குறைபாடுடையது அக்குறைபாடு காரணமாக தாயன்பிலும் குறைகள் ஏற்படலாம். இறைவனது திருவருட்சக்தியே அம்பிகை. இறைவன் திருவருட்சக்தியோடு அபின்னமாக இரண்டறக் கலந்திருக்கின்றான். அத்திருவருட்சக்தியாகிய தாயோ பிறவிகள் தோறும் தொடர்ந்து நின்று ஆன்ம கோடிகளுக்குப் பேரருள் புரிகின்றாள். "தொடர்ந்து நின்ற தாய்" என்பார் அப்பர் சுவாமிகள். எனவே அத் திருவருட்சக்தி நம்மேல் காட்டுகின்ற பெருங்கருணை மிகமிக உயர்ந்தது.

எனவே அருளாளர்கள்

"தாயினும் நல்ல தலைவர்"

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து"

என்றெல்லாம் அத்திருவருளை வியந்து போற்றுவார்கள். உருகி உருகி ஏத்துவார்கள்.

திருவருட்சக்தியே பிரேரிக்கின்ற சக்தி. உலகியலிலே தந்தையிடம் எதனையாவது பெறவேண்டி நிற்கும் குழந்தை தாயுடனே சென்று தந்தையை அணுகி, தாயின் பரிந்துரையோடு தந்தையிடம் பெறவேண்டியதைக் கேட்டுப் பெறுகிறது. திருவருட்சக்தியே இறைவனிடம் நம்மை இணைக்கும் "தாயொடு சென்று தாளினைக் கூடு" என்பது நமது சாத்திரங்கள் காட்டும் நெறி. இந்தத் திருவருட்சக்தியாகிய தாய் நமக்காகத் தவம் செய்கின்றாள். இதனைக் கந்தபுராணம் தெளிவுபட எடுத்துக் காட்டும். அம்பிகை தவம் செய்வதற்கு இறைவனிடம் அனுமதி கேட்கின்றாள். இறைவனை அவமதித்து அபசாரம் புரிந்த தக்கனுக்கு மகளாயிருந்த தன் குற்றம் நீங்க பிராயச்சித்தமாக - தவம் புரிய வேண்டுமென்கிறாள். ஆனால் இறைவனோ அம்பிகையைப் பார்த்து, "சர்வ லோகங்களிலும் எம்மேல் முதிர்ந்த பக்தி செலுத்துபவர்களில் உன்னைப் போல யாரும் இல்லை. எனவே நீ தவம் புரிவதற்குக் காரணம் வேறுண்டு. உலகில் உள்ள சர்வான்மாக்களும் உனது பிள்ளைகள். அவர்கள் திருவருள் பெறவேண்டுமென்று நீ அவர்களுக்காகத் தவம் புரிகின்றாய்" என்று கூறியருளுகின்றான்.

"பத்தியை எம்பாற் பழுத்த பண்பினாற்
சத்தியே நின்னிகர் சகத்தி லில்லையால்
இத்திறம் முயலுத லெல்லை தீர்ந்தநின்
புத்திரர் வீடுறு பொருட்டுப் போலுமால்"

என்கிறார் கச்சியப்பமுனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய திருவருட்சக்தியை வழிபட்டால் இம்மைப்பயனும் மறுமைப் பயனும் கிட்டும். இம்மைக்கு வேண்டிய கல்வியும் செல்வமும் வீரமும் கிட்டும். உலகியல் வாழ்வில் இவை மூன்றும் கிட்டினால் வெற்றி கிட்டும் இதனையே நவராத்திரி விரதமும் அதனைத்தொடரும் விஜய தசமியும் குறிக்கும். அன்னையாகிய எம் பெருமாட்டியை இறைஞ்சு வோம் அவள் மூலமாக எமது பரமபிதாவாகிய சிவபரம்பொருளின் திருவருளைப் பெறுவோம். இம்மைக்கு வேண்டியவற்றையும் மறுமைக்கு வேண்டியவற்றையும் பெறுவோம். பொன்னும் மெய்ப்பொருளும், போகமும் திருவும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வோமாக.

ச. விநாயகமூர்த்தி

## நல்ல நூல்கள் நலம் தரும்

நூல்கட்டிக் கோணலை நீக்கிய மரங்கள் மாளிகைகளிலும் கோயில்களிலும் நிழலில் கட்டிடத்தில் திகழ்ந்து எண்ணெய் பூசிப் பளபளப்புடன் இருக்கும். அதுபோல் நீதி நூல்களைத் தட்டி மனதின் கோணலை நீக்கிய மனிதர்கள் உயர்ந்த பதவி களில் அமர்ந்து பல்லோராலும் மதிக்கப் பெறுவர். நூல்கட்டிக் கோணலை நீக்காத மரங்கள் விறகுத் தொட்டியில் வெயிலில் கிடந்து மழையில் நனைந்து அடுப்பில் எரிக்கப்படும். அதே போல் அற நூல்களுடன் பழகாதவர் பல்லோராலும் பழிக்கப் பட்டுத் தாழ்வடைவர்.

நூலின் அளவுதான் நுண்ணறிவின் அளவு ஆகும். நல்ல நூல்களைக் கற்குந்தோறும் அறிவு நாளும் நலம் பெறும். இறைவன் கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி கல்லா மனத்துடன் நில்லாத் தன்மையன்.

'ஞானச்சுடர்' புரட்டாதிமாத வெளியீட்டில்
யோகஜோதி கா. கணேசதாசன் அவர்கள்

பெரியோர்களைத் துணையாகக் கொண்டு வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கரும் செய்கை செய்தீரன்

நம்மாழ்வார், ஞானசம்பந்தர் முதல் மகாத்மா காந்திவரை பெரிய காரியங்களைச் செய்திருப்பினும் தாங்கள் அவற்றைச் செய்ததாகக் கருதியதே இல்லை. கர்வம் கொண்டதுமில்லை. உலகிலுள்ள மக்கள் அனைவரிலும் தாம் கீழானவர்களாகவே கருதினார்கள். பணியுமாம் என்றும் பெருமை என்ற குறளை வாழ்ந்து காட்டிய பெருமை இவ்வகைப் பெரியார் அனைவருக்குமுண்டு.

ஒருவர் செய்ய இயலாது வியக்கின்ற செயலை மற்றொருவர் எளிதாகச் செய்து விடுவதைக் காண்கிறோம். நீரின் மேல் நடத்தலையும், நெருப்பின் மேல் இருத்தலையும், வேறு ஒருவர் காணாமல் உலகத்தில் உலாவுதலையும்கூட, எளிதான செயல்கள் என்றே தாயுமானவர் கூறுகின்றார்.

இவைகள் எளிய செயல்கள் என்றால் அரிய செயல்கள் யாவை? இதற்கும் தாயுமானவரே விடை கூறுகின்றார். சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது. என்று அவர் கூறும் போதுதான் அரிய செயல் யாது என்பதை ஒருவாறு அறிய முடிகின்றது. பெரிய புராணத்தில் சொல்லப்படும் அனைவரும் செயற்கரும் செயல்கள் செய்தவர்கள்தாம். ஆனால் இயற்பகையார் செய்த செயல்தான் உலகியல் முறையில் நின்று பார்க்கும்போதுகூடச் செயற்கருஞ் செயலாகக் காட்சி அளிக்கின்றது.

இவர் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்தார். சிவனடியார் வந்து எதைக் கேட்டாலும் இல்லை என்னாது கொடுக்க வேண்டுமென்பதே அவரது குறிக்கோளாகும். ஒரு நாள் வயோதிப அடியார் ஒருவர் இவரது வீட்டிற்கு வந்து சேர்ந்தார் நான் ஒரு பொருளை விரும்பி வந்தேன் அதனைத் தரச் சம்மதமானால் சொல்கிறேன் என்றார் அடியவர். "என்னது எம்பிரான் அடியவர் உடைமை! ஐயமில்லை நீர் கேளும் என்றார் இயற்பகையார். வந்த கிழவர் "மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்தேன் என்றார். உடனே மனைவியை அழைத்து கிழவர் விருப்பத்தைத் தெரிவித்தார். மனைவியார் முதலில் நடுங்கினாராயினும் "தாங்கள் உரைத்த ஒன்றைச் செய்வதைத் தவிர வேறு உரிமை எனக்கில்லை" என்றார் மனைவி.

---

☆ உழைப்பொன்றுதான் உயர்வுக்குத் தலைவாசல். ☆

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உன் மனைவியை அழைத்துக் கொண்டு போகும் போது உறவினர் தடுப்பார்கள் எனவே நீயும் கூடவரவேண்டுமென்றார். இயற்பகையாரும் அப்படியே செய்தார். சரி இனி நீ போகலாம் என்றார் கிழவர். கொஞ்ச நேரம் செல்ல கிழவர் உரக்கக் கத்தினார். இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டு நீ வருவாய் ஓலம்! செயற்கரும் செய்கை செய்தவனே ஓலம்! என்றதும் இயற்பகையார் கிழவரிடம் ஓடோடி வந்தார். என்ன புதுமை கிழவரைக் காணவில்லை. இறைவன் இயற்பகையாருக்குக் காட்சி கொடுத்தான்.

வந்த கிழவர் இயற்பகையின் ஆற்றலைச் சோதிக்கவே வந்தார். மனைவியைத் தருதல் சாதாரண மனிதன் கனவிலும் கருதமுடியாத தொன்று ஆனால் சாதாரண மனிதன் செயற்கரும் செய்கை செய்யும் பெரியவனாக மாறும் பொழுது சாதாரண மனிதன் செய்ய முடியாத வற்றையும் செய்கிறான். இத்தகைய செயலை யாரும் செய்ய முடியு மென்று கூறமுடியாது. ஆனால் திருக்குறள் பின்வருமாறு கூறுகின்றது.

"செயற் கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற் கரிய செய்கலா தார்."

என்று கூறுமேயானால் அதன்படி வாழ்ந்த பெரியார்கள் உலகில் ஒருவர் இருவராவது இருக்கத்தான் செய்வார்கள். இச்செயலின் பின்னே உள்ள இயற்பகையின் மனநிலையை நன்குணர்ந்தே சேக்கிழார் சுவாமிகள் செயற்கருஞ் செய்கை செய்த தீரன் என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார்.

குறள் கூறிய செயற்கருஞ் செயல் பலவகைப் படுமேனும், அவற்றுள் எல்லாம் தலைசிறந்தது பிறர் கனவிலும் கருத முடியாத இச்செயல் என்று கூறலாம்.

ந. சிவபாதம் "புத்திதாளி"

நேர்மைதான் சமுதாயத்தின் சிறப்பிற்கு அளவுகோல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் ஒன்றே

சைவசமயிகள் சிவன், விநாயகர், முருகன், அம்பாள், வைரவர் ஆகிய பல மூர்த்திகளை தமது கோயில்களில் அமைத்து எல்லாத் தெய்வங்களையும் பாரபட்சமின்றி வழிபட்டு வருகின்றனர். இதனைக் காண்கின்ற பிற சமயத்தவர்கள் முழுமுதற் பொருளாகிய ஒரு இறைவனை வணங்காமல் பல தெய்வக் கோட்பாடுடையவர்கள் சைவசமயிகள் என இகழ்ந்து கூறுவர். இவ்வாறு கூறுவது சைவ சமய சாஸ்திர உண்மைகளைத் தெரிய உணரமாட்டாமையின் பிதற்றலேயாம்.

பல விக்கிரக வணக்கங்களும் ஒன்றிலிருந்து ஏற்பட்ட தோற்றங்களே தவிர வேறல்ல. பலகாரக் கடைக்காரன் ஒரே மாவில் பிட்டு, இடியப்பம், இட்டலி, முறுக்கு, றொட்டி என்றெல்லாம் பல்வேறான பலகாரங்களைத் தயார் செய்து விடுகிறான். எல்லா விதமான பலகாரங்களுக்கும் மாவு மூலப்பொருளாய் இருப்பது போன்று பல விதமான கடவுள் விக்கிரகங்களுக்கும் மூலப்பொருள் சிவமேயாகும். இட்டலியைச் சாப்பிடுபவர்களுக்கும் பசி மாறுகிறது. தோசையை உண்பவர்களுக்கும் பசி போகிறது. அது போன்று ஒவ்வொரு சைவ சமயத்தவரும் தங்கள் தங்கள் விருப்பத்திற்குரிய கடவுளை வணங்கி அருளைப் பெறலாம்.

மூவர் அருளிய தேவாரத் திருப்பாடல்களில் விநாயகர் பற்றிய குறிப்புக்கள் பதினொரு பாசுரங்களிலும் முருகப் பெருமான் பற்றிய குறிப்புக்கள் நாற்பத்தேழு பாசுரங்களிலும் காணப்படுகின்றன. சமய குரவர்கள் சிவபிரானை உபாஸ்ய மூர்த்தியாகக் கொண்ட போதிலும் அவர்களிடம் சிவம் வேறு, விநாயகர் வேறு, முருகன் வேறு, என்ற பேதமித்த எண்ணம் சிறிதும் காணப்படவில்லை. இத்தகைய பேதமித்தமற்ற மாறுபாடற்ற உறுதியான கோட்பாடு ஒவ்வொரு சைவ சமயத்தவரின் உள்ளத்திலும் இரத்தத்திலும் உயிர் நாடியாக ஒன்றித்துள்ளது.

“ஏகம் ஸத்; விப்ரா பஹுதா வதந்தி” என்பதோர் வேத வாக்கியம் உண்டு. “எக்காலமும் மாறுபாடற்ற கடவுள் ஒருவரே. ஞானிகள் அக்கடவுளைப் பல நாமங்களால் கூறுவர்” என்பது அதன் பொருள்.

கடன் பெறுவது நட்புக்கு உகந்ததல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டலிப் பிரியரும் தோசைப் பிரியரும் இட்டலி தான் சுவையானது இல்லை தோசைதான் சுவையானது என்று அடிபடுவதைப் பார்த்து பலகாரக் கடைக்காரன் சிரிப்பது போல விநாயகர் வழிபாடு சிறந்தது, இல்லை முருக வழிபாடே சிறந்தது என பக்தர்கள் சண்டை போட்டுக் கொள்வதைப் பார்த்து சிவபெருமானும் சிரிக்கத்தான் செய்வார்.

முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறைப் பேராசிரியர் கலாநிதி டி. எம். பி. மகாதேவன் என்றும் பேரறிஞர் இந்து சமய தத்துவம் என்னும் நூலில் கூறும் கருத்துக்களைக் கவனிப்போம்:-

“ஓர் இந்து சாமி விக்கிரகங்களை வழிபடும் போது அவன் முழுமுதற் பொருளாகிய சிவனையே வழிபடுகின்றான். இந்து சமயத்தை விக்கிரக ஆராதனைச் சமயம் என்று குறிப்பிடுவது சரியன்று. பொறி புலன்களால் காணமுடியாத பரமான்மாவின் சின்னங்களே திருவுருவங்கள் என்பது சைவசமய நூல்களின் உறுதியான கோட்பாடு. மந்திர சக்தி நிறைந்த அருளாளர்களால் திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு அவற்றில் இறைவன் சாந்நித்தியம் ஆன பின்பே சைவசமயிகள் கோயில்களில் அத்திருமேனிகளை வழிபடுகின்றனர். அவர்கள் பல வேறு மூர்த்திகளின் திருவுருவங்களை வழிபடும் போது ஒரே இறைவனை அங்கெல்லாம் கண்டு வழிபடுகின்றனர். இவ்வுண்மையை பிற சமயத்தவர்கள் உணர்வதில்லை.

விநாயகர் என்றால் தனக்கு மேலாக ஒரு தலைவர் இல்லாதவர் என்று பொருள். சிவம் வேறு விநாயகர் வேறு என்றால் விநாயகர் என்ற திருநாமம் விநாயகப் பெருமானுக்கு உரியதாகாது. இதனால் இரு மூர்த்திகளின் பேதமின்மையை உணரலாம்.

முருகப் பெருமானும் சிவமும் ஒன்றே என்பதைக் கந்தபுராணச் செய்யுள் ஒன்று சூரபன்மன் கூற்றாகக் கூறுகின்றது. முருகனைச் சிறுவனென்றும் அவனை எளிதில் வென்றுவிடலாமென்றும் எண்ணிப் போருக்குச் சென்ற சூரபன்மன் முருகப் பெருமான் பிரம விஷ்ணுக்களாலும் காண முடியாத சிவ பரம்பொருள் என்பதை உணர்ந்தான்.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி யன்றோ.

— கந்தபுராணம்

அகமும் புறமும் ஒரே மாதிரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமும் சக்தியும் வேறல்ல என்பது சமயநூல் முடிபு. சக்தி, உமை, கலைச்செல்வி, இலக்குமி, துர்க்கை முதலிய பெருநாமங்கள் ஒரே உமையம்மைக்கு உரியன. சிவமும் உமையும் சூரியனும் அதன் ஒளிக்கிரணங்களும் போலப் பிரிப்பின்றி நிற்பவர் என்பது வேத சிவாகமங்களின் முடிபு.

மேலும் பரம்பொருள் ஒன்றே என வலியுறுத்தி சைவத்திரு. சக்திவேலன் எழுதிய "சிவனருளமுதம்" என்னும் நூலிலுள்ள பின்வரும் பாடல் மூலம் நாம் அறியலாம்.

"சிவனே நின் அருட்புறத்தை சிறிதேனும் அறியாமல்
அவமே விளம்புகிறார் அறிவே மயங்குகிறார்
புவனாதி பண்டமொடு கலைபகிர்ந்த கர்த்தனும் நீ
சிவசக்தி நீ அர்த்த இரண்டுருவும் பொருளும் நீயே".

ஆகவே "ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்" எல்லாம் சிவமே என்பதை நாம் நன்றாக உணரவேண்டும்.

"எல்லாம் சிவமயம்"

கா. கணேசதாசன் J. P

## கல்வியின் உயர்வு

பணக்காரர் ஒருவர் ஒருமுறை பாரதியாரின் புலமையைப் பாராட்டி நூறு ரூபாய் நோட்டு ஒன்றை பாரதியாருக்குக் கொடுத்தார். பாரதியார் அதை வாங்க மறுத்துவிட்டார்.

"உங்கள் கைகளில் அந்த நோட்டை வைத்துக் காட்டுங்கள். அதை நான் எடுத்துக் கொள்கிறேன். ஏனென்றால், நீங்கள் கொடுக்க நான் வாங்கினால் என் கை தாழ்ந்துவிடும். என்றைக்கும் சரஸ்வதி, லட்சுமிக்குப் பணிந்து போகக்கூடாது. அது உலகத்திற்கு நல்லதல்ல" என்று தமது செயலுக்கு பாரதியார் விளக்கம் தந்தார்.

நல்லவர் உள்ளம் நல்லவர் அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்மாலிய மகிமை

[illegible]

நிர்மாலியம் என்பது கோவில் - சுவாமி - பூசகர் என்பவர்களுடன் மட்டுமே சம்பந்தப் பட்டது; தம்முடனல்ல என்பதே இறை வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட எல்லோரதும் எண்ணமாகும். மேலும் கோவிலிலுள்ள சுவாமிக்குச் சாத்தியவை மட்டுமே நிர்மாலியம்; வீட்டிலுள்ள சுவாமி படங்கட்குச் சாத்தியவை எவையும் அத்தகையன அல்ல என்பதும் அவர்களது நினைப்புமாம்.

## நிர்மாலியம்

காணுமிடமெல்லாம் நிறைய வண்ண மலர்கள் மலர்ந்திருந்தாலும் அவை யாவும் நிர்மாலியம் என்ற உயர்வைப் பெறுவதேயில்லை எனலாம். காரணம் சுவாமிக்குச் சாத்திய - அலங்கரித்த - அருச்சித்த மலர்கள் மட்டுமே இத்தகைய உயர்நிலைக்கு உரியனவாயமைகின்றன.

அதாவது முகை ( மலரும் நிலை ), அலர் ( மலர்ந்த நிலை ) என்று இரு பருவ மலர்களைவிட ஏனையவை யாவும் நிர்மாலியம் என்ற தகுதியைப் பெற முடியாதவையாகின்றன. ஏனெனில் இவ்விரு பருவ மலர்கள் மட்டுமே வழிபாட்டுக்கு உத்தமமானவை 'என்பதனாலேயாம்.

நிர்மாலியம் என்பது மேலே குறிப்பிட்டது போல் தனியே மலர்களை மட்டும் கருதுவதாயில்லை எனப்படுகின்றது. ஏனெனில் சுவாமிக்குச் - சாத்திய அலங்கரித்த திவ்வியப் பொருட்களுங்கூட நிர்மாலியம் என்றே புராணங்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

## பிம்ப சுத்தி

பூசகர் ஒருவரின் நாளாந்தக் கோவிற் கடமைகளுள் முதலாவதும் முக்கியமானதும் ' பிம்ப சுத்தி ' செய்தல் என்பதாகும்.

அதாவது முதல் நாளில் கோவிலிலுள்ள மூலவிக்கிரகம் அல்லது விக்கிரகங்கட்கும், ஏனைய தெய்வத்திருமேனிகட்கும், பரிவார மூர்த்திகட்கும் சாத்திய அலங்கரித்த - அருச்சித்த மலர்கள், பச்சிலைகள் என்பவற்றினையும் அலங்காரப் பொருட்கள், ஆடை அணிகலன்கள் போன்றவற்றையும் பக்திச் சிரத்தையுடன் களைந்து மந்திரஞ் சொல்லி நீராட்டியோ, நீர் தெளித்தோ சுத்தி செய்தலாம்.

★ விவேகத்தை விட சிறந்த குரு வேறு இல்லை ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் போதியளவு பெற்றுக் கொள்ளக் கூடியதாயுள்ள சில பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒரு நாளிலேயே ஒவ்வொரு காலப் பூசைக்கு முன்பும் நிர்மாலியம் களைவது ஒரு சிறப்பம்சமாகும்.

களைதல்

கோவில்களில் நிர்மாலியங்களைக் களையும் போது பின்வரும் முறைகளைக் கைக்கொள்ளுவது உத்தமமானது என்பதாக பூஜாவிதி நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.

விக்கிரகங்கள் கல்லாலானது தானே என்றும், திருமேனிகள் உலோகங்களாலானது தானே என்றும் நினையாது அவையும் உயிரோட்டம் மிக்கவையே என மனதிற் கொண்டு பக்திச் சிரத்தையுடன் சுவாமிக்கு நோகாதவாறு நிர்மாலியங்களைக் களைதல் வேண்டும்.

இதுபோன்றே நிர்மாலியங்கள் கூட - வெறும் பூக்கள் எனவும் பச்சிலைகள் எனவும் எண்ணாது அவற்றுக்கு நோகாதவாறும் அவை எவ்வகையிலும் சிதைவுறாதவாறும் களைதல் வேண்டும்.

கோவிலிற் பூசகர் நடந்து கொள்வது போன்றே தத்தமது வீடுகளிலுள்ள சுவாமி படங்கள் மீது சாத்திய - அலங்கரித்த நிர்மாலியங்களைக் களையும் போதும் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டுமென்பதும் சொல்லித் தெரிய வேண்டியதில்லையல்லவா?

தவிர்க்க வேண்டியவை:

பொதுவாகக் கோவில்களிலுஞ்சரி, வீடுகளிலுஞ்சரி நிர்மாலியங்கள் என்பவை சாதாரண மலர்கள் - பச்சிலைகளிலும் பார்க்க உயர்ந்ததாகக் கொள்ளப் படுவதேயில்லை. மறு நாள் அவை மனிதக்கால்களால் மிதி படக் கூடிய இடங்களிலும் விளக்கு மாற்றினாற் கூட்டப்பட்டு ஏனைய குப்பைகளுடன் சேர்த்துக் குழியுட் போடப்படுவதிலிருந்தும் இதனைத் தெரிந்து கொள்ளலாம். சில இடங்களில் வீதி ஓரத்தில் கண்டபடி வீசி எறியப்பட்டிருக்கும்.

செய்யத்தக்கவை

களையப்பட்ட நிர்மாலியங்களை மீண்டும் கோயிற் பூந்தோட்டத்திலுள்ளவையும் வீட்டில் வளர்க்கப்படுபவையுமான மலர்ச் செடிகட்கு அடியிலே சேர்த்து விடுதலே மிகச் சிறந்ததாகும். ஏனெனில் அவை எவரதும் கால்களிற் படுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாது போதல் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம். மீண்டும் தாம் மரத்திற்குப் பசளையாகி விடுதல் மற்றைய காரணம்; மேலும் வெயில், மழை, பனி போன்ற இயற்கைத் தாக்கங்களினால் நேரடியாகப் பாதிக்கப்படாது நிழலிலே மறைவான இடத்திலிருந்து வாடி, மண்ணோடு மண்ணாகி விடுவதும் குறிப்பிட வேண்டியதாகும்.

கால் நடைகட்கும் இவற்றை உணவாகக் கொடுக்கலாம். இவ்வாறு செய்வது புண்ணியமான செயலாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவற்றைக் கொடுக்கும் போது கால் நடைகளின் கால்களில் மிதிபட்டுச் சேதமாகாவாறு நிலைத்தொட்டியுட் போட்டு கூடிய விரைவிலேயே மீண்டும் சேகரித்து விடுதல் நல்லதாகும்.

தோஷமற்றவை:

இறைவனுக்குச் சாத்தியவை, அலங்கரித்தவை, அருச்சித்தவை யாவையுமே நிர்மாலியங்கள் எனப் பொதுவாகக் கொள்ளப்பட்டாலும் பின்வருவன நிர்மாலிய தோஷமற்றவை என விதந்துச் சொல்லப்பட்டுள்ளது. அவையாவன அறுகு, வில்வம், துளசி, ருத்திராட்சமாலை, முத்துமாலை, இரத்தினமாலை என்பனவாம்

விக்கிரகங்களையும் தெய்வத் திருமேனிகளையும் அலங்கரிக்க பட்டாடைகளும் பொன் - வெள்ளி - பித்தளை அங்கிகளும் தோஷமற்றவையாகவே கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வாறான நிலையில் எளியவர் அங்கிகளையும் இவற்றுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

அல்லாதவை:

பின்வரும் பச்சிலைகள், மலர்களைக் குறித்த காலங்கட்கு வைத்திருந்து பூஜை செய்வதற்கு நூல்களில் இடமளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அறுகு | — | ஒருவருடம் |
| வில்வம் | — | ஆறுமாதம் |
| துளசி | — | மூன்று ,, |
| தாமரை | — | ஏழு நாள் |
| தாழம் பூ | — | ஐந்து ,, |
| அரளி | — | மூன்று ,, |
| கொக்கு மந்தாரை | — | மூன்று ,, |
| சண்பகம் | — | ஒரு ,, |

ஆன்மீகம் நமக்கு உண்மையான இன்பம் அளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை உலர்ந்திருப்பினும் கழுவி மீண்டும் சாத்தலாம் எனப்படு கின்றது. ஏனெனில் இச்சந்தர்ப்பங்களில் இவை நிர்மாலியமாக மாட்டா வாம்.

## பூஜித்தல்

"எனது நிர்மாலியங்களைப் பூஜித்தவன் ஆயிரம் ஆண்டுகள் மனி தப் பதவியாகி வருந்துவாய்" எனச் சிவபிரான் ஆதக முனிவருக்குக் கூறியதாகச் செய்தி ஒன்று புராணத்திற் காணப்படுகின்றது.

நாளாந்தம் பூஜைகள் ஒழுங்காக நடைபெறும் கோவில்களைத் தவிர்த்து மற்றைய சின்னஞ் சிறு கோவில்களிலும் சில வேளைகளில் வீட்டிலுள்ள சுவாமி படங்கள் மீதுள்ள நிர்மாலியங்களும் கூட அடுத்த நாளிற் களையப்படுவதில்லை.

சிவபிரானது மேற்படி கூற்றிலிருந்து நாளாந்தம் நிர்மாலியங்க ளைக் களையவேண்டும் என்பதும் இறைத் தேவைக்கான மலர்கள் அன் றலர்ந்தவையாக இருக்க வேண்டுமென்பதும் மறைமுகமாக உணர்த் தப்படுவதாக கொள்ள முடியும்.

## பூச்சொரிதல்:

சுவாமி வீதிவலம் வரும் போது பூச்சொரிதல் இன்று பெருங் கோவில்களில் முக்கிய நிகழ்ச்சியாகிவிட்டது. சொரியப்படும் வரை பவி த்திரமாகப் பாதுகாக்கப்பட்ட அவை சுவாமி மீது சொரியப்பட்டதும் தமது சிறப்பினை இழந்து போனதாகவே நினைக்கத் தோன்று கின்றது.

காரணம் அவற்றினைக் கால்களாற் தவிர்க்க முடியாதவாறு எல் லோரும் மிதித்துக் கொண்டே செல்வது வழக்கமாகிவிட்டது. சுவாமி மீது சொரியப்பட்டதனால் நிர்மாலியங்களாக மாறிவிட்ட அவற்றை மிதித்துச் செல்வது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒரு செய லாகவே கொள்ள வேண்டும்.

ஒரு வேளை இவ்வகையிற் சொரியப்பட்ட பூக்களுக்கு விதி விலக்கு ஏதாவது அளிக்கப்பட்டிருக்கலாமென்றே கருதக்கிடக்கின்றது.

பொதுவாக வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட எல்லோரும் தத்தம் வீடுகளிலுள்ள சுவாமி படங்கட்கு மலர்களை மட்டுமே சாத்துவதனால், இங்கு நிர்மாலியம் என்பது அவற்றையே பெரிதும் கருதலாயிற்று.

ஆ. கதிரமலைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி பற்றி ரமண மகரிஷி

ஒரு சமயம் ரமணரின் முன்னிலையில் தீபாவளி பற்றிய பேச்சு எழுந்தது.

அன்பர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது ரமணர் கூறினார்.

" தீபாவளி பற்றிய பாடல்கள் ரமணர் எழுதினார். அவை பற்றித் தெரியுமா?



" நான் இந்த உடம்பு மட்டுமே என்ற எண்ணம் உடையவனே நரகன். உடல் சடு பாட்டை ஒழித்து, ஆத்மா தானாகவே ஒளி விடுவது தான் தீபாவளி. அதாவது தேகாத்ம பாவம் (உடல் பற்று) நீங்கி, ஆத்மாவாய் ஒளி விடுவதே தீபாவளித் தத்துவம் "

தீபாவளியைப் பற்றி இரண்டு பாடல்களை ரமணர் இயற்றியிருக்கிறார். அவை எழுந்த சூழ்நிலையும் சுவையானதுதான். ரமணர் எதையும் தமக்காகச் செய்வதில்லை. பிறருக்காகவே செய்வார். ஞானத்தின் அடையாளமே அதுதானே.

ஒரு தீபாவளி தினத்தன்று பகவானது சிறந்த பக்தரான முருகனார் ரமணரிடம் தீபாவளி பற்றி எழுத வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்

முருகனார் சிறந்த கவிஞர். எனவே, " நீங்கள் கவிதை எழுதலாமே! " என்றார் ரமணர்.

முருகனார் ரமணர் எழுதினால் தாமும் எழுதுவதாகக் கூறினார்.

ரமணரும் ஒப்புக்கொண்டு பிறகு பாக்களை எழுதினார்.

இறைவன் ஒருவனே கொடுப்பவன்.

முதல் பாடல்:

தான் வெறும் உடல் மட்டுமே என்பவன் தான் நரகன். நரகன் யார் என்று அறிந்து ஞான இருப்பினால் அவனைக் கொல்பவனே நாராயணன். ஞானத்தால் நாம் உடல் அல்ல என்று அறிந்து கொள்வது தான் தீபாவளியாகும்.

"நரருடன் நானா நரகுவந்து ஆளும்
நரகன் எவ்வென்று உசாவி ஞானத் திகிரியால்
நரகனைக் கொன்றவன் நாரணன் அன்றே
நரக சதுர்த்தசி நல்தினமாமே"

இரண்டாவது பாடல்:

உடம்பு நரகம் போன்றது. அதுவே நான் என்ற தவறான கருத்துடையவன் நரகன். அந்தத் தவறான கருத்தை அழித்து, ஆத்மாவாக ஒளி விடுவதே தீபாவளி.

"நரக உருவா நடவையில் உடலை
இரதம் அகம் எனவே கெட்ட - நரகனாம்
மாயாவினை நாடி மாய்த்துத் தானாய் ஒளிர்தல்
தீபாவளியாம் தெளி"

ஆகவே உடல் பற்று நீங்கி, ஆத்மாவாக ஒளி விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்பது தான் தீபாவளி என்பதன் கருத்தாகும்.

ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம், ராஜயோகம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று மற்றொன்றைவிட குறைந்த அளவு ஒருவருடைய வாழ்க்கையில் வளர்ச்சி அடைந்திருந்தால் அவர் ஸ்ரீராமகிருஷ்ணர் வகுத்த வழியில் முழுமையாகத் தன்னை தயார் செய்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

பண்புக்கு பெரும் பகை செல்வம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பெயருக்கு விளக்கங்கள்

இறைவன், பேரும் ஊரும் இல்லாதவன்; குணமும் குறியும் இல்லாதவன்; பிறப்பும் இறப்பும் இல்லாதவன்; ஆரம்பமும் முடிவும் இல்லாதவன்.

அவ்வாறு அருவமாக இருக்கும் இறைவன் ஆன்மாக்களுக்கு அருள் புரியும் பொருட்டு திருவுருவத் திருமேனிதாங்கி அவதாரம் எடுக்கிறான் என்று இந்து சமய ஞான நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

இறைவனின் அருட்கிறத்தின் ஊற்றில் பக்தியில் திளைத்த அனுபூதிமான்கள், பேரில்லாத இறைவனுக்கு எண்ணற்ற பெயர்களைச் சூட்டி, அவர்மீது தங்களுக்குள்ள ஆராதபக்தியை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.



இறைவனின் திருப் பெயர்களை உச்சரிப்பதால், 'நான், எனது, என்ற அகங்கார மமகாரங்கள் நம்மை விட்டு நீங்கும்; மனதில் அசுத்தம் அகன்று, பக்தி பெருகும்; உலக பந்தத்திலிருந்து விடுதலை அளித்து இறைவனுடன் இரண்டறக் கலக்கும் மோட்ச நிலை ஏற்படும், பகவானின், நாமங்களை உச்சரிக்க உச்சரிக்க உடலும் புலன்களும் மனமும்' புத்தியும் ஆனந்த சாகரத்தில் மிதந்து புனிதம் பெறும்.

இறைவனின் நாமங்கள் 'ஊனினை உருக்கி உள்ளொளியைப் பெருக்கும்' என்பது அருளாளர்கள் கண்ட உண்மையாகும்.

நாம் வாழும் இன்றைய உலகம் இயந்திர மயமாகிவிட்டது. வாகனங்கள் இயந்திரங்களிலிருந்து வெளியேறும் புகை, காற்றை நச்சுப்படுத்துகிறது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் பூமியையும் கடலையும் அசுத்தமாக்குகிறது. இயந்திரங்கள், வாகனங்களின் இரைச்சல் சத்தம் நம்மைச் சூழ்ந்துள்ள ஒலி அலைகளின் நிதானத்தை இழக்கச் செய்கின்றன. இதனால் ஆபத்து ஏற்படும் என்பதை இப்போது விஞ்ஞானிகளே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மனம் பந்தியிலே குணம் குப்பையிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலச் சொற்களை அட்சர சுத்தமாக உச்சரிக்கும் போது அவற்றிலிருந்து எழும் ஒலித்திவலைகள் சூழலைத் தூய்மையாக்கும் திறன் வாய்ந்தவை என்பது அறிவியலாளர் ஒப்புக் கொண்டுள்ள உண்மை. இதனை இந்து சமய ஞானிகள் எப்போதோ உணர்ந்து நாமாவளிகளாலேயே இன்று ஆலயங்களில் இறைவனின் திருநாமங்களை உச்சரித்து உலக நன்மைக்காக அர்ச்சனைகள் நிகழ்த்தப்படுகின்றன. புனிதப் பொருட்களைக் கொண்ட ஹோமங்கள் வளர்க்கப்படுகின்றன.

ஒரு கோடி தரம் இறைவனின் நாமத்தைச் சொல்லிப் பூஜிப்பது கோடி அர்ச்சனை.

ஒரு லட்சம் தடவை இறைநாமத்தைச் சொல்லிப் பூஜிப்பது லட்சார்ச்சனை.

ஆயிரம் தடவை இறைநாமம் சொல்லி பூஜிப்பது சகஸ்ர நாமார்ச்சனை

300 தடவை அவன் நாமம் சொல்லிப் போற்றுவது திரிசதி.

108 தடவை இறைநாமம் கூறிப் பூஜிப்பது அஷ்டோத்தரம்.

16 தடவை இறைவனின் பெயர்களைச் சொல்லிப் பூஜிப்பது சோடஷ அர்ச்சனை

உயிர்களும் உலகமும் உய்யும் பொருட்டு, அருவமாயிருக்கும் பரமசிவன் எடுத்துக் கொண்ட அருள் திருவுருவங்களில் முருகன் வடிவமும் ஒன்று.

தம்மை வழிபடுபவர்களுக்கு எளிதில் அருள் புரிபவர் முருகப் பெருமான், குமரனை மனமுருகி வழிபட்டால் துன்பங்கள் நீங்கும், இன்பங்கள் ஓங்கும், இஷ்ட சித்திகள் சித்திக்கப்பெறும் என்பது, வேத காலத்து வியாசர் முதல் இக்காலத்து அனுபூதிமான்கள் வரை கண்ட உண்மை.

இன்று முருகப்பெருமானின் பதினாறு திருநாமங்களை மட்டும் எடுத்துக் கொண்டு, அவற்றில் பொதிந்திருக்கும் தத்துவார்த்த விளக்கத்தை நோக்குவோம்.

1 முருகன் - என்னும் சொல் இறைத்தன்மையும், என்றும் குன்றாத அழகும் இளமையும் வாய்க்கப்பெற்றவன் எனப் பொருள்படும்.

அருள், ஆண்மை, இளமை, இனிமை, எழில் முதலிய நற்பண்புகளுக்கெல்லாம் இலக்கணமாக இயற்கையின் அழகெல்லாம் அவரேயாக அமைந்தவர் முருகப்பெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான இலட்சணங்களையும் குணாம்சங்களையும் கொண்ட முருகன், அவற்றைத் தன்னிடம் அன்பு செலுத்துபவர்கள் அனைவருக்கும் அருளுபவன் என்பது முருகன் அடியார்களின் அனுபவ நம்பிக்கை.

அதனால் முருகனை குழந்தை உருவத்தில் வைத்து வழிபடுவது பெரும்பாலான பக்தர்களின் வழக்கமாகிவிட்டது.

2 குமரன் - என்ற சொல், வாலிபத்தன்மையைக் குறிப்பது.

பிரம்மசரியம் காக்கும் வயதில், ஆண்மையும் வீரமும் அஞ்சாமையும் மிகுந்து நிற்பது இயல்புதான்.

ஆணவத்தையும் அக்கிரமத்தையும் அநீதிகளையும் எதிர்த்து அவற்றைப் பூண்டோடு ஒழிக்க வேண்டும் என்றும் வைராக்கியமும் துணிவும் வாலிப வயதில் மிகுந்து நிற்கும்.

ஆணவம், கன்மம், மாயை எனப்படும் சூரன், சிங்கன், தாரகன் ஆகிய தீய சக்திகளை அழித்தவன் குமரன்.

3 காங்கேயன் - என்னும் சொல் கங்கையில் தோன்றித் தவழ்ந்தவன் என்பதைக் குறிப்பிடுகிறது.

சிவபிரானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஒளிப் பிழம்புகளை வாயுவும் அக்கினியும் கங்கையிடம் சேர்ப்பித்தனர்.

அந்தப் பிழம்புகள், கங்கையில் குழந்தையாகத் தவழ்ந்து சரவணப் பொய்கையை எய்தியதை காங்கேயன் என்ற சொல் குறிக்கிறது.

தீ, காற்று, ஆகாயம், நீர், பூமி ஆகிய ஐம்பெரும் பூதங்களின் சம்பந்தம் கொண்டவர் இறைவன் என்பது இதன் தத்துவமாகும்.

4. கார்த்திகேயன் - என்னும் நாமம், சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக வடிவம் கொண்டிருந்த முருகன், கார்த்திகை மகளிர் அறுவரால் பாராட்டி வளர்க்கப் பெற்றவர் என்பதைக் குறிக்கிறது.

தமிழ்நாட்டுத் தெய்வமாகிய முருகனை வட இந்திய மக்கள் 'கார்த்திகேயன்' என்ற பெயராலேயே குறிப்பிட்டு வருகிறார்கள். "எல்லாப் பெண்களும் இறைவனுக்குத் தாய் போன்றவர்களே" என்பதனை இந்த வரலாறு சுட்டுவதாகப் பெரியோர்கள் கூறுவார்கள்.

5. சரவணன் - என்னும் நாமம், கங்கையானவள் தீப் பிழம்புகளைத் தாங்கும் சக்தியின்றி, நாணல் புற்கள் நிறைந்த குளிர்ந்த சரவணப் பொய்கையில் அவற்றை விட்டாள். பொய்கையில் பூத்திருந்த

தாமரை மலர்களில் அந்தத் தீப்பொறிகள் ஆறு குழந்தைகளாக வீற்றிருந்தன என்று இப்பெயரின் தோற்றத்துக்கான காரணத்தை கந்த புராணச் செய்தி கூறுகிறது.

கந்தன் - என்னும் நாமத்துக்கு 'திரண்டவன்' என்பது பொருள்.

சரவணப் பொய்கையில் வளர்ந்த குழந்தைகளைக் காணச்சென்ற சிவனும் பார்வதியும், அந்தக் குழந்தைகளின் வளர்ச்சியையும் விளையாட்டுக்களையும் கண்டு மகிழ்ந்தார்கள்.

பார்வதி தேவியார் தாயன்பு பெருக, அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து அணைத்துக் கொண்ட போது ஆறு குழந்தைகளின் உடல்களும் ஓர் உருவம் பெற்றன.

கடவுள் அனைவரது ஆற்றல்கள் அனைத்தையும் ஒருங்கே கொண்டவன் அடியார்களுக்குப் பற்றுக்கோடானவன் கந்தசுவாமி - என்ற பொருளும் கந்தன் என்ற சொல்லுக்கு கொள்ளப்படுகிறது.

7 ஆறுமுகன் - என்னும் நாமம், ஆறு திருமுகங்களைக் கொண்டவன் என்பதைக் குறிக்கும்.

ஆறுமுகங்கள் ஆவன : ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், அதோமுகம் என்பன.

இவை நோக்கும் திக்குகள் ஈசானம், ஆகாயத்தை நோக்கியும் தத்புருஷம் - கிழக்கு நோக்கியும், சத்யோஜாதம் - மேற்கு நோக்கியும் அதோமுகம் கீழ் நோக்கியும் விளங்கும். இறைவன் எங்கும் நிறைந்தவர் என்பதை உணர்த்துவது இது.

ஆறுமுகப் பெருமானிடம் அனைத்துத் தெய்வங்களின் தன்மைகளும் ஆற்றல்களும் அடங்கியுள்ளன என்பது இந்தப் பெயரின் பொருளாகக் கொள்ளப்படுகிறது.

8 விசாகன் - என்னும் நாமம், வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் முருகன் அவதாரம் செய்தவர் என்ற காரணத்தால் ஏற்பட்ட பெயராகும்.

9 குகன் - என்னும் திருப்பெயர், அன்பர்களின் உள்ளமாகிய இருதயக் குகையில் அமர்ந்திருப்பவர்; அவர்களைக் காப்பவர் என்ற கருத்தைக் கொண்டது.

தர்மம் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 சுப்பிரமணியர் - என்னும் நாமம் யாகங்களின் போது மும்முறை முருகனைக் கூவி அழைக்கும் பெருமை கொண்டதாக விளங்குவது.

வைதிக நெறியை வளர்க்க ஏற்பட்ட சுவாமி சுப்பிரமணியர்.

வேதத்துக்கு முக்கியம் வேள்வி. வேள்விக்கு முக்கியம் தீ. தீப் பிழம்பாக உதித்து, ஏனைய மூன்று பூதங்களின் சம்பந்தம் பெற்றவர் முருகப்பெருமான்.

அவர் அக்கினி சொரூபமானவர். அதனால் வேள்வி வளர்க்கும் வேதியர்களின் வேத நெறியைக் கண்காணித்துப் பரிபாலிப்பவர் சுப்பிரமணியராவார்.

11 வேள் - என்னும் நாமம், பக்தர்களால் மிகவும் விரும்பப்படுபவர் எனப் பொருள்படும்.

செந்தமிழ் மொழியிலே, சிவந்த நிறம் கொண்ட முருகனை, செவ்வேள், முருகவேள் என்று அழைப்பார்கள்.

12 சாமி - என்னும் சொல், சுப்பிரமணியக் கடவுளுக்கு மட்டுமே உரித்தான சிறப்புச்சொல்லாக அமரகோசம் என்னும் வடமொழி நூலில் போற்றப்பட்டுள்ளது.

சுப்பிரமணியரைக் குறிக்கும் போது, "தேவசேனாபதி, சூர: ஸ்வாமீ; கஜமுகானுஜ:" என்று அமரகோசம் நூல் குறிப்பிடுகிறது.

சிவபிரான் சிவசக்தி ஐக்கிய ரூபராகி தீப்பிழம்பாக முருகனை உற்பவித்து, மின்னல் போன்று ஜொலிக்கும் வேலாயுதத்தை தாங்கி, உலக க்ஷேமத்துக்காக ஜோதிக் குமாரனாக முகூர்த்தம் கொண்ட சுப்பிரமணியருக்கு 'சாமி' என்ற தனிச்சிறப்பு கிடைக்கிறது.

13 கடம்பன் - என்னும் நாமம், முருகன் கடம்பமலர் மாலையை அணிந்திருப்பதால் ஏற்பட்ட காரணப்பெயராகும்.

முருகன் தக தகக்கும் சிவப்பு நிறமானவன்; அவன் அணியும் ஆடை செந்நிறமானது; அவனின் திருமார்பை அலங்கரிக்கும் மலர் செந்நிறமானது. கடம்ப மலரின் நிறம் சிவப்பு. குறிஞ்சி நிலத்துக்கே உரிய சிறப்பான மரம் கடம்பு.

குறிஞ்சி நிலத்தெய்வமாகக் கொண்டாடப் பெற்ற குமரனைக் கடம்ப மலர்களால் அலங்கரித்தார்கள்.

14 வேலாயுதன் - என்ற நாமம், கையை விட்டு நீங்கிச் சென்று பகைவர்களைத் தாக்கும் சக்தி மிக்க வேலை ஆயுதமாக ஏந்தியவன் என்பதைக் குறிக்கும்.

அடக்கமுள்ள குணம் அலையில்லாத நதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதத்தையும் கந்தனையும் பிரிக்க முடியாது. அது அவரது ஞானசக்தியாக விளங்குவது. முருகனுக்கே உரித்தான இதைப் 'படை அரசு' என்று போற்றுவார்கள். வினைக்குன்றை அரிக்கும் ஆற்றல் வேலுக்கு உண்டு.

மாயையே உருவான கிரவுஞ்ச மலையை தூள் தூளாகப் பொடிசெய்த வேலைப்போற்றிப் பணிபவர்களுக்குத் துன்பம் ஏதும் ஏற்படாது

மெய்ஞ்ஞானமாகிய சக்திவேல் அஞ்ஞான இருளைப் போக்குவது அது என்றும் அடியவர்களைப் பாதுகாப்பது.

15 மயில்வாகனன் - என்னும் திருநாமம், மயிலை வாகனமாகக் கொண்டவர் என்பதால் ஏற்பட்டதாகும்.

யானை, ஆடு, மயில் என்பன முருகனுக்கு வாகனமாக அமைந்த போதிலும் மயிலுக்கே மிகவும் சிறப்பு தரப்படுகிறது.

வேதங்கள் கூறும் மகாமந்திரமே மயிலாக இயங்குகிறது என்று சமய சாஸ்திர வல்லுநர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முருகப்பிரான் மயில் மீது எழுந்தருளி, அதன் தோகைக்குள் அடங்கி நடுவே அமர்ந்திருக்கும் சிறப்பான தோற்றம் 'ஓம்' என்ற பிரணவத்தின் மத்தியில் அவர் இருப்பதைச் சித்தரிக்கிறது.

இந்திரனாகிய மயிலையும் சூரபத்மனின் பாதி உடலாகிய மயிலையும் முருகன் வாகனமாகக் கொள்வார். இந்திர மயில் வாகனத்தின் தலை வலப்பக்கமும், தோகை இடப்பக்கமாயும் அமையும். சூரபத்ம வாகனத்தின் தலை இடப்பக்கமும் தோகை வலப்பக்கமாயும் இருக்கும்.

16 சேவற்கொடியோன் - என்பது, சேவலைக் கொடியாகக் கொண்டவர் என்பதைக் குறிக்கிறது.

புற இருளை அகற்ற சூரியன் உதிப்பதை சேவல் கூவி உணர்த்தும். முருகனின் கொடியிலுள்ள சேவல் - தன்னை வழிபட வரும் அடியவர்களின் அக இருளை நீக்கி - ஞானசூரியனாகிய முருகப் பெருமான் வருவதை அடியவர்களுக்கு உணர்த்தும் நாதரூபமானது என இந்து சாஸ்திர விற்பன்னர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள்.

முருகனின் வேலும், மயிலும் போன்றே சேவலும் அடியவர்களின் இடர்களைக் களையும் ஆற்றலைக் கொண்டது.

முருகப்பிரானுடைய திருநாமங்களை உள்ளத்தில் அன்புடன் உச்சரித்து இம்மையிலும் மறுமையிலும் உறுதியாக எல்லா நலன்களையும் பெறமுடியும். இந்த உண்மைக்கு அருளாளர்களின் வரலாறுகள் நமக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

தொகுப்பு : சந்நிதியான் ஆச்சிரமம்

திறமைதான் ஏழையின் நிரந்தர சொத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

16 - 07 - 1999 வெள்ளிக்கிழமை, நேரம் முற்பகல் 11 மணி 30 நிமிடங்கள் ஆகிவிட்டதால் வழமைபோல சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த வெள்ளிநிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மண்டபத்தில் அடியார்கள் கூட்டம் சிறிதுசிறிதாக வந்து சேர்ந்த வண்ணம் இருந்தது.

ஆரம்பத்தில் அங்கே வருகைதந்தவர்கள் மண்டபத்தில் தாங்கள் விரும்பிய இடங்களில் தங்கள் வசதிப்படி வந்து அமர்ந்து கொண்டிருந்தாலும் சிறிதுசிறிதாகச் சேரத்தொடங்கிய அடியார்கள் கூட்டம் மண்டபம் நிரம்புமளவுக்கு அதிகரித்து விட்டதால் இறுதியில் அடியார்கள் மண்டபத்திற்கு வெளியேயும் அமரவேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டு விட்டது.



✵ விவேகத்தை விடச் சிறந்த நிதி வேறு இல்லை. ✵



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி வெள்ளிதோறும் வெள்ளி நிகழ்வும், அதனைத் தொடர்ந்து அன்னதானச் செயற்பாடும் ஆச்சிரமத்தில் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறுகின்ற செயற்பாடுகளாகும். இவை இரண்டும் திருப்தியான முறையில் நிறைவேற வேண்டும் என்பது ஆச்சிரமத்தினுடைய சுவாமிகள் மோகனதாஸ் அவர்களுடைய மிக முக்கியமான எதிர்பார்ப்புகளாகும். இதனால் இந்த நேரத்தில் சுவாமிகள் இந்த இரண்டு விடயங்களையும் சிறப்பாக நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்பதில் தன்னை மறந்து செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். இது வழமையாக வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறுகின்ற விடயங்கள் என்பதை அதில் பங்குபற்றுகின்ற அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

16 - 07 - 99 வெள்ளிக்கிழமை வெள்ளி நிகழ்வாக மயிலங்காட்டைச் சேர்ந்த திரு. கம்பு சந்திரநாதன் அவருடைய வயலின் இசை பக்கவாத்திய சகிதம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அடியார்கள் கூட்டம் சராசரியாக வெள்ளிக்கிழமைகளில் கூடுகின்ற அளவைவிட மிகையாகக் கூடிக்கொண்டிருப்பதை அவதானித்த சுவாமிகளுக்கு மனதில் பயமும், பதற்றமும் ஏற்படத்தொடங்கியது.

அன்றைய அன்னதானத்திற்கு உபயகாரர் எவரும் இல்லை. இதனால் அன்னதானத்திற்குரிய செலவு முழுவதையும் ஆச்சிரமமே தாங்க வேண்டியிருந்தது. எனவே, ஆச்சிரமத்திலிருந்த அரிசி மற்றும் பொருட்கள் முழுவதையும் சேர்த்து ஒருவாறு அன்றைய அன்னதானத்தைச் செய்து முடிப்பதற்கு சுவாமிகள் திட்டமிட்டிருந்தார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்களை இதற்கு முன்பும் சுவாமிகள் பலமுறை எதிர்நோக்க வேண்டியிருந்ததால் இது சுவாமிகளுக்குப் பழக்கப்பட்ட ஒரு விடயமாகத்தான் இருந்தது. ஆனால் அன்றைய தினம் ஒரு எல்லையைக்கடந்து அடியார்கள் அதிகரித்ததுதான் சுவாமிகளின் பதற்றத்திற்குக் காரணமாகும்.

களஞ்சியத்தில் எல்லாமே முடிந்துவிட்ட நிலையில் நான் என்ன செய்யப் போகின்றேன் — எவ்வாறு சமாளிக்கப் போகின்றேன் ... என்பது உண்மையிலேயே சுவாமிகளுக்கு ஒரு சோதனையாகத்தான் இருந்தது. தன்னுடைய சங்கடமான நிலையை அப்பொழுது அங்கே காணப்பட்ட எமது பேரவை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தி தன்னுடைய துன்பத்திற்கு ஏதாவது வழி கிடைக்குமா? என சங்கடப்பட்டுக்கொண்டிருந்தார்.

நிகழ்வு முடிவடையும் கட்டத்தில் வந்துகொண்டிருந்த அடியார் கூட்டத்தைக்கண்ட சுவாமிகள் மேலதிகமாகச் சமைப்பதற்கு அரிசி இல்லாத நிலையில் என்ன செய்வதென்று யோசித்து ஆலயத்துக்குப் பக்கத்தில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கக் கிளையில் தற்சமயத்திற்கு ஒரு மூடை அரிசியைக் கடனாக எடுத்து அடியார்களைத் திருப்திப்படுத்துவதற்கு முடிவு செய்தார். ஆச்சிரமப் பணியில் சுவாமிகளுக்கு அடுத்த நிலையில் இருந்து செயலாற்றிக் கொண்டிருக்கும் அவரது மகனை அழைத்து மேலே குறிப்பிட்ட கடையிலிருந்து ஒரு மூடை அரிசியைக் கடனாக எடுத்து வருமாறு கட்டளையிட்டார். அதற்கமைய அவரது மகனும் கடைக்கு போவதற்காக ஆயத்தம் செய்தார்.

> " அப்பொழுது கதவைத் திறந்து கொண்டு ஆச்சிரமத்தில் நடைபெறும் அன்னதானப் பணிக்கு இடைக்கிடையே உதவி புரிந்து வருபவரான கரவெட்டி துன்னாலையைச் சேர்ந்த எஸ். ஜெயரட்ணம் அவர்கள் சுவாமிகளிடம் வந்து ஒரு மூடை அரிசி கொண்டு வந்திருக்கிறேன். அம் மூடையை உங்கள் தொண்டர்களை விட்டு இறக்குங்கள் " என்று சொன்னார்.

நடந்து கொண்டிருப்பதை அவதானித்துக் கொண்டிருந்த பேரவை உறுப்பினர்களும் சுவாமிகளும் ஒருவரை ஒருவர் மௌனமாக நோக்கிக் கொண்டனர். இறுதியில் அரிசி கொண்டுவந்த ஜெயரட்ணம் அவர்களைப் பார்த்துச் சுவாமிகள்

> " முருகன்தான் உங்களை இங்கே அனுப்பி இருக்கின்றார். இங்கே வருகை தந்திருக்கும் அடியார் கூட்டத்திற்குச் சமைப்பதற்கு மேலதிகமாக அரிசி இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். இந்த அரிசி வந்தபடியால் திருப்தியான முறையில் எல்லோரும் பசியாறக் கூடியதாக முருகனின் அனுக்கிரகம் கிடைத்து விட்டது "

என்று சொல்லி அன்றைய அன்னதானச் செயற்பாட்டை பூரண திருப்தியுடன் நிறைவேற்றி முடித்தார்.

ஆம்! எல்லாமே முடிவடைந்து விட்டது. தற்பொழுது கொடுப்பதற்கு ஒன்றுமில்லையே நான் என்ன செய்வேன் என்று கலங்குகின்ற சூழ்நிலைகள் ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கு அரிதாகத்தான் ஏற்படுவதுண்டு. அப்பொழுதெல்லாம்.

ஐயா! கொண்டுவந்திருக்கிறேன் பெற்றுக் கொள்ளுங்கள் ......

ஐயா! கொண்டுவந்திருக்கிறேன் அதை இறக்குங்கள்... —

உழைப்புத்தான் உயர்வுக்குத் தலைவாசல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுகின்ற இதுபோன்ற சம்பவங்கள் தான் அங்கே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

கேட்டவர்களுக்குக் கொடுக்கின்ற தெய்வம் மட்டுமல்ல சந்நிதி முருகன், கேட்காமல் நினைக்கின்ற பொழுதே அள்ளி வழங்குகின்ற அருட் தெய்வம் தான் சந்நிதிமுருகன். அதுவும் தூய்மையான நோக்கத் துடன் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் அன்னதானச் செயற்பாட்டிற்கு அவனின் அருட் பார்வை கிடைக்காமலா போகும்.

எல்லாம் அவன் அருளாலே!

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்

## மெய்க்கும் பொய்க்கும் உள்ள தூரம்

முகலாய சக்கரவர்த்தியான அக்பர், தன் அரசவையில் அறிஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் முதன்மையான இடத்தைக் கொடுத்திருந்தார்.

ஒரு சமயம் அரசசபை கூடியிருந்தது. அதில் அறிஞர்கள் பலர் வீற்றிருந்தனர்.

அப்போது அக்பர், "உண்மைக்கும் பொய்க்கும் உள்ள தூரம் எவ்வளவு?" என்று ஒரு கேள்வி கேட்டார். அங்கிருந்த அறிஞர்கள் அத்தனை பேரும் விழித்தனர்.

அரசசபையில் இருந்த விகடகவியான பீர்பல் உடனே எழுந்து "அரசே! நான்கு விரல் தூரம்" என்றார்.

அதைக் கேட்ட அக்பர், "எப்படி" என்று வினாவினார்.

உடனே பீர்பல், "அரசே! எதையும் காதால் கேட்பது பொய். கண்ணால் காண்பதுதான் மெய். அதனால்தான் பொய்க்கும் மெய்க்கும் உள்ள தூரம், நம் காதிற்கும் கண்ணிற்கும் உள்ள தூரமான நான்கு விரல் தூரமே" என்றாராம்.

ஆன்மீகம் நமக்கு உண்மையான இன்பம் அளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

வடமராட்சி மக்களின் அனுசரணையுடன்

# செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகன்

அவர்களின்

## தன்னலம் கருதாத் தொண்டு நலம் பாராட்டி நிகழ்த்திய விழா



மேற்படி விழா 09 - 10 - 1999 சனிக்கிழமை காலை சந்நிதி வேலவருக்கான அபிஷேக, ஆராதனைகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தின் பேரவையின் தலைவர், திரு. க. இருப்பரங்கிரிநாதன் அவர்களின் தொடக்க உரையுடன் ஸ்ரீ ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் " அவர்களின் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது."

வாழ்க்கைக்கு பயிற்சி பெறுவதுதான் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் குருமணி சந்திரசேகரம் அவர்கள் தமது தலைமையுரையில் விழா நாயகர் எங்ஙனம் இறைவனால் தொண்டு நிலைக்கு ஆட்கொள்ளப்பட்டோர் என்பதனையும், இலண்டனில் நடைபெற்ற சர்வதேச இந்து சமய மகா நாட்டிற் கலந்து கொண்டு எமது சைவ பாரம்பரியத்தினை, எமது நாகரிகத்தினை, எமது கலை, கலாச்சாரங்களை எழுச்சி பெறச் செய்துள்ளார்கள் என்பதனையும் குறிப்பிட்டார்கள். சுவாமி விவேகானந்தர் அவர்கள் எங்ஙனம் எமது இந்து முத்திரையைச் சர்வதேச அரங்குகளிற் பொறித்தார்களோ அங்ஙனமே பொறித்து வந்துள்ளார். விழா நாயகரின் தொண்டு நலம் வார்த்தைகளால் விரித்துரைப்பதற்கரிய தொன்றும் அவர்களின் தன்னலம் கருதாத் தன்மையினால் யாவும் வியப்பனவாக உவந்தளிக்கின்ற பெருந்தன்மை அளவிடற்கரியதென்றும் சர்வதேச அரங்கில் வைத்தமிழ்ச் செல்வி, கலாநிதி ஞானபண்டிதர் கலாவித்தகி அவர்களின் பணியைப் பின்பற்றி, அவர்கள் மேற்கொண்டுள்ள பணிகள் மென்மேலும் சிறக்கக் கலியுகவரதன் கந்தசுவாமியாரதும் நல்லைக் குருமணி அவர்களினதும் ஆசியினை வேண்டித் தமது தலைமையுரையினை நிறைவு செய்தார்கள்.

வாழ்த்துரை வழங்கியவர்களாகிய பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா அவர்கள், பருத்தித்துறை உதவி அரச அதிபராய் இருந்து இளைப்பாறியவரும் சமாதான நீதவானுமாகிய திரு. சி. முருகேசம்பிள்ளை அவர்கள், பருத்தித்துறைப் பிரதேச உதவித் திட்டமிடற் பணிப்பாளர் திரு. மா. மகேந்திரன் அவர்கள், சட்டத்தரணிகள் சங்கப் போஷகர் திரு. இ. ருத்திரா ( B. Sc. London ) அவர்கள், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. சிவநாதன் அவர்கள் ஆகியோர் எமது விழா நாயகர் அவர்கள் தமது மனம், மொழி, மெய் ஆகிய திரிகரண சுத்தியோடு உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து வாழ்கின்ற பெருந்தகைமையினை விதந்துரைத்தார்கள்.

பேரவையினர் மற்றும் வடமராட்சி கம்பன் கழக அமைப்பாளர்கள், கரவெட்டி திருவிழா படப்பிடிப்பாளர்கள் சிற்பாலயக் கலைஞர் திரு. ஜீவரத்தினம் ஆசாரியார் ஆகியோர் விழா நாயகருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். அத்துடன் பேரவையினரால் பாராட்டுப்பத்திரம் ஒன்றும் வழங்கப்பட்டது.

பதிலுரை வழங்கிய விழா நாயகர் அவர்கள் இலண்டன் மாநகரில் வேல்ஸ் நகரத்திலுள்ள குன்றக்குமரன் ஆலயத்தின் திருவருட் பொலிவையும் இலண்டனில் வதியும் தமிழர்கள் தமது தாயகம் பற்றி எத்துணை பற்றுடையவர்களாக வாழ்கின்றார்கள் என்பதனையும் தமிழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் ஆங்கில மொழியன்களைத் தமிழ்ப்பாவியன்களாக்கி அருட் பாடல்களைப் பாராயணம் செய்கின்றார்கள் என்பதனையும் எந்நிலை யிலும் எமது தனித்துவமான கலை, கலாச்சாரங்களைப் பேணுவதிற் பெருவிருப்புடையவராக வாழ்கின்றனர் என்பதனையும் எடுத்து உரைத் தார்கள். மேலும் எமது சந்நிதி முருகன் ஆலயம், கீரிமலை நகுலேஸ் வரம் ஆகியவற்றைத் தம் மனக்கண்முன் நிறுத்தி பூஜிக்கின்றார்கள். தமது காணிக்கைகளைச் செலுத்துகின்றார்கள் என்பதனையும் எடுத்துக் காட்டினார்கள்.

மொரீஷியஸ் நாட்டில் வாழும் தமிழர்கள் எமது மொழி, மதம் பற்றி எத்துணை பெருமிதமுடையவர்களாய் வாழ்கின்றனர் என்பதனை யும் அங்கெல்லாம் எமது கலை, கலாச்சாரம் மிளிரச் செய்வதற்கும் எமது மொழி, மதம் பேணப்படுவதற்கும் எமது தொண்டுகள் வேண்டப்படு வனவாகும் என்பதனையும் எடுத்து விளக்கினார்கள்.

அதனை அடுத்து தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவ மாணவியரதும் கரவெட்டி ஞானசாரியார் கல் லூரி மாணவ, மாணவியரதும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

ஈற்றில் நன்றியுரை நிகழ்த்திய எமது பேரவையின் உப செய லாளர் பண்டிதர் க. முத்துவேலு அவர்கள், விழாநாயகரின் ஜனனபதி யாகிய இணுவையில் அருள்மிகு பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் நிகழ்த்தப்பெற்ற பாராட்டு விழாவினை அடுத்து, எமது பேரவை வட மராட்சி மக்களின் அனுசரணையுடன் இவ்விழாவை எடுப்பதிற் பெரு மகிழ்வு கொள்கின்றதென்பதனையும் அதுவும் விழாநாயகர் அவர்களின் பெற்றோர்கள் முன்னிலையில் இவ்விழாவிற் பாராட்டக்கிடைத்தமை யைப் பெருமிதமாக நோக்குகின்றதென்பதனையும் எடுத்துக் கூறினார்கள்.

விழா முடிவில் ஸ்ரீ முருகன் அடியார்கள் யாவருக்கும் மாகேசுர பூஜை வழங்கப்பட்டது.

தனி மனிதன் எவ்வளவு ஆற்றல் உடையவனாக இருந்தாலும், ஆபத்தான காலத்தில் உறவினர் உதவியின்றி நிலைத்து நிற்க முடியாது.

- விதுரநீதி

பணம் பந்தியிலே குணம் குப்பையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் நமசிவாய

# குரு வழிபாடு

சைவ சமயத்தின் பொதுநூலாக வேதமும் சிறப்பு நூலாக ஆகமங்களும் காணப்படுகின்றது. ஆகமங்கள் சிவவழிபாட்டின் மூலமாக மனிதனது ஆன்மீக ஈடேற்றத்தைக் கூறுகின்றது. சைவ நாற்பாதங்கள் மட்டுமன்றி குரு, லிங்கம், சங்கம வழிபாட்டையும் முக்திக்குரிய வழிகளாகக் கூறியிருப்பதைக் காண்கின்றோம். இதை அடியொற்றிய சைவ சித்தாந்த சாத்திரங்களும் குரு, லிங்க, சங்கம வழிபாட்டைப்பற்றிக் கூறியிருக்கின்றது. இவற்றில் குருவழிபாடு பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

குரு என்றால் அறியாமையைப் போக்குபவர் எனப்பொருள்படும். அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற, ஞானாசாரியனை, கல்வி போதிப்பவரை, தீட்சை அளித்தவரை குரு எனலாம். இந்துநாகரிக வரலாற்றில் குருபாரம்பரியமானது மிகமுக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. அத்திரி, ஆங்கிரஸ, பரத்துவாசர், வசிட்டர், வாமதேவர், விசுவாமித்திரர், கண்வர் போன்ற ரிஷிகள் வேதகாலத்தில் குருவாக விளங்கி ஆத்மஞானம் பரவ உதவினர். உபநிஷத காலத்தில் யாஞ்ஞவல்கியர், நாரதர், யமன், பிரஜாபதி, உத்தாலகர்... போன்றோர் ஞானகுருவாக விளங்கினர். வியாசர் குருபாரம்பரியத்தின் ஆதிபுருஷராவர். இவ்வாறு குருபாரம்பரியமும், குருவழிபாடும் இன்றுவரை பேணிவருவது கண்கூடு.

இறைவனே குருவாகி விளங்கிய சந்தர்ப்பங்களை இந்து நாகரிக வரலாற்றில் காண்கின்றோம். சிவன் வேத, ஆகமங்களை உபதேசித்தது மட்டுமன்றி கல்லாலமர நிழலில் தட்சணாமூர்த்தியாக சனகாதி முனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்ததையும், சதாசிவன் திருக்கயிலாயமலையில் இருந்து அகச்சந்தானாச் சாரியார்களாகிய திருநந்தி தேவர், சனற்குமாரர், சத்தியஞானதரிசினி, பரஞ்சோதிமுனிவர் ஆகியோருக்கு தத்துவ உபதேசம் செய்ததையும் முருகப்பெருமான் தந்தைக்கே குருவாகி பிரணவப் பொருளை உபதேசித்து சுவாமிநாதர் ஆகியமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்கு பகவத் கீதையை உபதேசித்ததையும் அன்றிச் சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு "பித்தாப் பிறை சூடி...... என்றும்" தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் " என்றும் அருண்மொழித்தேவருக்கு "உலகெலாம் ... ..." என்றும் முருகப்பெருமான் கச்சியப்பசிவாச்சாரியாருக்கு "திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்...... " என்றும் அருணகிரிநாதருக்கு "முத்தைத்தரு பத்தித்திருநகை ... ..." என்றும் அடியெடுத்துக் கொடுத்தமை இவர்களுக்கு இறைவன்தான் குரு என்பதைக் காட்டிநிற்கின்றது.

இவை மட்டுமன்றி சைவசித்தாந்த சாஸ்திர நூல்கள் இறைவனே குருவாக வருகின்றான் என்பதை ஆணித்தரமாகக் கூறுகின்றது. பழக்கப்பட்ட விலங்குகளைக் கொண்டு வேறு விலங்குகளைப் பிடிப்பது போல ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையுடைய சகலருக்கு முன்னே சிவன் ஒரு ஆதாரத்தைத் தாங்கி (குருவாக) வந்து அவர்களிடமுள்ள பாசத்தைக் கெடுக்கின்றான் என்பதை உமாபதிசிவாச்சாரியார் தனது திருவருட்பயனில் பின்வருமாறு கூறுகின்றார்.

"பார்வையென மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி."

இந்நெறிமுறையிலேயே திருஞானசம்பந்தருக்கு அம்மையப்பராகவும் மாணிக்கவாசகருக்கு குருந்தமர நிழலிலே பரமாசாரியராகவும் திருமூலருக்கு நந்திவடிவிலும் குருவாக வந்தமையை திருமுறைகள் எமக்குக் காட்டி நிற்கின்றது. மணிவாசகர் தனது திருவாசகத்திலே

"குருமணி தன் தாள் வாழ்க"
"அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையும் ... "
"புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவன் எனயானுந் தேறினன் காண்க"......

போன்ற அடிகள் மூலம் காட்டிநிற்கின்றார். திருமூலர் தனது திருமந்திரத்திலே

"குருவே சிவம் எனக்கூறினன் நந்தி... " என்பதோடு
"நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளாலே மெய்ஞ்ஞானத்தை நண்ணினேன்
நந்தி அருளாலே நான் இருந்தேனே."

எனக்கூறுகிறார்.

நீசர் நட்பு பேயோர் ஆக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தவகையில் இறைவன் குருவாக வருகைதந்த சந்தர்ப்பங்களை சுருக்கமாக நோக்கினோம். எதிர்மாறாக குரு தெய்வம் என்கின்ற கருத்துக்களும் இந்துப் பண்பாட்டில் போற்றப்பட்டு வருவதைக் காண்கின்றோம். எழுத்தறிவித்தவன் இறைவன் என்பது வேதகாலத்தில் இருந்தே போற்றப்பட்டு வருவதைக் காணலாம். குருவே பிரமா, குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரன் எனக்கூறுவது மட்டுமன்றி "குருவைத் தெய்வமாகப் போற்றுக" (ஆசார்யதேவோபவ) என உபநிடதம் கூறுவதும் சிந்திக்கத்தக்கது. மகாபாரதத்தில் ஏகலைவன் துரோணாச்சாரியாரைத் தெய்வமாகப்போற்றி களிமண்ணினால் சிலைசெய்து குருபக்தி செலுத்தி வழிபட்டு வில்வித்தையைக் கற்றமை குருபக்தியின் மேன்மையைக் காட்டி நிற்கிறது. இவற்றைவிட குருபக்தி, குருவின் தத்துவம் பற்றி குருகீதை என்கின்ற நூல் விளக்கமாகக் கூறுகின்றது. பின்வரும் குருகீதைச் சுலோகமும் குரு தெய்வம் என்பதை தெளிவுபடுத்தி நிற்கின்றது.

"குருர் பிரம்மா குருர் விஷ்ணு குருர்தேவோ மகேஸ்வரா:
குருர் சாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:"

எனவே குருவை வழிபட்டால் இறைவனை வழிபட்டதற்குச் சமம் என்பதன்றி இறைவனுடைய கோபத்திற்குப் பாத்திரமானால் குரு காப்பாற்றுவார். குருவின் கோபத்திற்கு பாத்திரமானால் எவரும் காப்பாற்ற இயலாது என்பதுவும் சூரியனின் சூட்டைத் தாங்கினாலும் சூரியனின் சூட்டைப் பெற்றிருக்கின்ற நிலச்சூட்டை தாங்கமுடியாது என்பதுவும் குரு இறைவனைவிட மேலானவன் என்பதைக் காட்டி நிற்கிறது.

மாணவரை ஒருநோயாளியாகவும் குருவை நோய்தீர்க்கும் மருத்துவராகவும் உவமித்து மாணவரின் தேவைகளை ஆசிரியரே தெரிந்து கொள்ளவும் அதற்கு வேண்டியன செய்யவும் வல்லவர் என்னும் கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

"அகத்திருள் நோய்க் குள்ளினர் அன்றி அதனை
எந்தவரும் காண்பரோ தான்."

என்கிறது திருவருட்பயன்.

அதாவது அறியாமையிற் சிக்குண்டு அவதியுறும் ஆன்மாக்களுக்கு ஆதரவளித்துக் கடைத்தேற்றக்கூடிய ஆற்றல் குரு ஒருவருக்கேயுண்டு என்கின்ற கருத்தை திருவருட்பயனில் உமாபதிசிவாச்சாரியார் தெளிவுபடுத்துகிறார். இந்தவகையில் 'கு' என்றால் இருள் 'ரு' என்றால் ஒளி என்றும் பொருள் கொண்டு அஞ்ஞான இருளை நீக்குபவர் குரு எனப் பொருள் கூறுகிறது.

தொடரும்......

செ. கந்த சத்தியதாசன் B. A. (Hons)

தர்மம் கொடுப்போரை தடுத்து நிறுத்தாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART 21

### NAVARATHTHIRI FESTIVAL

Navaraththiri festival is Celebrated in every hindus home all over the world. It is a festival to offer Pooja to "Sakthi" It Commences in the month of October.

The first three days, hindus offer pooja to Thurka, the goddess of braveness or war.

The next three days are meant for Luxmi the goddess of wealth.

The last three days are considered to be important for the Students and others concerned with education

A part from these nine days the consecutive 10-th day is celebrated as Vijayathasamy. People from all walks of life celebrate this day in a grand way. They wash their tools they use and keep them in the shrine room before the dols and worship.

It is an Auspicious day to the children to begin writing the Tamil alphabets. People offer flowers, fruits, Kadalai, Aval, and sweets to Sakthi who gives victory in life. At the end, these eatables are served to those who attended the festival. Students particularly observe this festival with pious and divinity.

S. Thurairajah
( English Tutor )

அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

**05 - 11 - 99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை திரு. சு. திருப்பரங்கிரிநாதன்

(பேரவைத் தலைவர்)

**விடயம் : 'பண்ணிசை'**

வழங்குபவர் : தேனருவி வே. சிவஞானம்

(பக்கவாத்திய சகிதம்)

---

**12 - 11 - 99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. தி. வேல்நம்பி

(விரிவுரையாளர், யாழ் / பல்கலைக்கழகம்)

**சொற்பொழிவு : 'திருவருள்'**

வழங்குபவர் : இளம்சைவப்புலவர் தி. செல்வமனோகரன்

---

**19 - 11 - 99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : க. அருள்லிங்கம்

(பேரவை உறுப்பினர், சீமெந்து கூட்டுத்தாபனம்)

**சொற்பொழிவு : 'வாக்குக்கு அருணகிரி'**

வழங்குபவர் : செல்வன் A. அனுசாந்தன்

---

**26 - 11 - 99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# கார்த்திகை - 1999

வெளியீட்டுரை : திரு. ப. ஆனந்தநடேசன்

(இலங்கை வங்கி பருத்தித்துறை)

மதிப்புரை : கவிஞர் சோ. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 1999 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2000 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org